


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 28-10-1994

அன்பளிப்பு 40P

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதால், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இதனால் எமது அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கும் உரிமை எமக்கே உண்டு.



# காமினி குண்டுத்தாக்குதலினால் கொல்லப்பட்டார்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரும், சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திசாநாயக்கா 23. 10. 1994 ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில், கொல்லப்பட்டார் என சர்வதேச செய்தித்தாபனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. படுகாயமுற்ற காமினி திசாநாயக்கா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே இறந்துள்ளார். இவருடன் ஐ. தே. கட்சியின் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சரவை அமைச்சர்கள் இருவர் உட்பட, 50 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், 300 பேர்வரை காயமுற்றதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது. ■

மேலதிக விபரங்கள் உள்ளே ==>

# விடுதலைப் புலிகள் - சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை இரண்டாவது சந்திப்பை நோக்கி முன்னேறியுள்ளது

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இரண்டாவது சந்திப்புநோக்கி முன்னேறியுள்ளது.

முதலாவது சந்திப்புக்கென, கடந்த 13 ஆம் நாள் வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் வந்திறங்கிய சிறீலங்கா அரசின், நான்குபேர்கொண்ட உயர்மட்டத் தூதுக்குழுவுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தி வரவேற்றனர். இது வெளிநாட்டு அரசுத் தலைவரின் வருகைக்கு ஒரு நாடு கொடுக்கும் மரியாதை போல் இருந்தது என, இதனை அவதானித்த செய்தியாளர்கள் வர்ணித்துள்ளனர். இந்த இராணுவ அணிவகுப்பு மரியாதையின்போது, பார்வையாளர்களாகப் பல்லாயிரம் பொதுமக்கள் கலந்துகொண்டனர். இதையடுத்து ஆரம்பமாகிய உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையில், தமிழீழ மக்கள் சந்திக்கும் அன்றாடப்பிரச்சினைகளும் அதற்கான தீர்வுவிடயங்களுமே முதற்கட்டமாகப் பேசப்பட்டது. சிறீலங்கா தரப்பில், ஐந்துவிடயங்கள் முன்வைக்கப்பட்டன.

1. வடக்கு - கிழக்கிற்கு மின்சாரம் வழங்குதல்.
2. உடைந்த கட்டடங்கள், பாடசாலைகள், வீதிகள், புகையிரதப்பாதைகள் போன்றவற்றைத் திருத்தியமைத்தல்.
3. யாழ். நூலகத்தை புனரமைத்து, புனர்நிர்மாணம்செய்தல்.
4. போர்நிறுத்தம் நோக்கி மோதல்களை நிறுத்துதல்.
5. போக்குவரத்துப் பாதைகளைத் திறத்தல்;

என்பனவே அவை. இவற்றுடன் சேர்த்து

1. முற்றுமுழுதான பொருண்மியத் தடைநீக்கம்.
2. அகதிகளாக இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல்.
3. கடல்வலயத் தடைச்சட்டத்தை நீக்கி, மீன்பிடித்தொழிலில் மக்கள் சுதந்திரமாக ஈடுபட வகைசெய்தல்; ஆகியவற்றை விடுதலைப் புலிகள் ஆரம்பப் பேச்சுவார்த்தைக்கான விடயங்களாக முன்வைத்தனர்.



நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தையின் போது, இடப்பக்கமாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், வலப்பக்கமாக சிறீலங்கா பிரதிநிதிகளும் வீற்றிருக்க மத்தியில் "தமிழீழ தேசியக் கொடி" பறக்கின்றது.

சுமுகமானமுறையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து, சிறீலங்கா உயர்மட்டத்தூதுக்குழுவினர், சிறீலங்காவுக்குத் திரும்பிச்சென்றனர். இவர்கள் சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க உட்பட, சிறீலங்கா அரசின் உயர்மட்டத்தினருடன் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை எடுத்துவிளக்கியுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையின், நல்லெண்ண அறிகுறியாக சிறீலங்கா அரசு, தமது காவலில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட 18 பேரை விடுதலைசெய்துள்ளது.

அதற்குப்பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழப் பிரதேசத்தில் அத்துமீறிப்பிரவேசித்து, சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டிருந்த 9 சிங்கள மீனவர்களை விடுதலைசெய்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா தூதுக்குழுவினருக்கும் இடையில், நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, முழுமையான போர் நிறுத்தமும், பொதுமக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கான பாதைத் திறப்பும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# சமாதானப் பேச்சுக்களின்போதும் இராணுவ விரிவாக்கம் அவசியம்

## சிரேஸ்ட இராணுவ அதிகாரி வலியுறுத்து

அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை நடாத்தும் வேளையிலும், இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு மற்றும் விசேட பயிற்சிகள் என்பன தொடர்ந்து இடம்பெறவேண்டுமென, இராணுவ அதிகாரி ஒருவர், ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட உயர் இராணுவ அதிகாரி மேலும் தெரிவிக்கையில், "அரசியல் பேச்சுக்களின் மூலம் தீர்வு ஏற்படாமல் இடையில் முறிவு ஏற்படுமானால், விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை நடத்தக்கூடிய பலமான நிலையில் இராணுவம் இருக்கவேண்டும். முன்பு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றபோது, போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடக்கப்பட்டனர். இதனால், மீண்டும் போர் தொடங்கியபோது இராணுவத்தினர் பெருமளவில் பலியாகினர். இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெற அனுமதிக்கக்கூடாது. இவ்வாறான

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

உள்ளே...
தமிழீழ நீதிமன்றம் - 4ம் பக்கம்
வெளிநாட்டில் வாழும் தமிழீழ மக்களாலும் தமிழீழ தேசியம் பாதுகாக்கப்படவேண்டும் - 7ம் பக்கம்
சிறுகதை:- இப்படித்தான்... - 13ம் பக்கம்

உள்ளே...
தமிழீழ உட்கட்டுமானம் - 11ம் பக்கம்
இந்திய மேலாண்மைக்கு எதிராக கிளர்ந்தெழும் இன்னொரு விடுதலை அமைப்பு - 6ம் பக்கம்
சிறீலங்கா வான்படையின் பலம் - நடுப்பக்கங்கள்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# தேசியக்கொடி வணக்கம் மக்களின் மகோன்னத கடமை

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாக தேசியக் கொடி விளங்குகிறது. நாட்டின் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அவ்வவ் நாடுகளினது தேசியக் கொடிகளின் சின்னம், நிறம் என்பன வேறுபட்டிருக்கும்.

நாட்டைப் போற்றி வணங்குவதற்குப் பதிலாக தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியக் கொடியை வணங்குவது நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பனவற்றை விடவும் உயர்ந்ததாக தேசியக்கொடி மதிக்கப்படுகின்றது. எனவே தான் ஒரு நாட்டின் எந்தவொரு சிறப்பு நிகழ்வுகளின் போதும், நாட்டின் தலைவர், படை, அரசுப் பணியாளர் உட்பட அனைவரும் தேசியக்கொடி வணக்கம் செலுத்துகின்றனர். தேசியக் கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போல், தேசியக் கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவே தான் தேசியக் கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெரும் குற்றமாகக் கருதப்பட்டு, அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகிறது.

வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழீழ மக்களின் பாரம்பரிய தாயகம். தமிழீழ தாயகத்தின் இறைமையின் சின்னமாக தமிழீழத் தேசியக் கொடி விளங்குகின்றது. 1990 ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27. 11. 1990) அறிவிக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக இருந்து வரும், எமது தேசியக் கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன.

"தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு; அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை; தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு; இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை; தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது; மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது" என்பதை 'மஞ்சள்' சுட்டி நிற்கின்றது.

"தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டால் மட்டும் நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியாது; தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும்; வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும்; பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும்; இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும்; சமத்துவமும், சமதர்மமும், சமூகநீதியும் நிலைநாட்டப்பட வேண்டும்; இவ்வாறான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்கும் எமது அரசியல் இலட்சியத்தை 'சிவப்பு நிறம்' குறியீடு செய்கின்றது.

"விடுதலைப் பாதை கரடு முரடானது; சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது; இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும்; என்றும் தளராத உறுதி வேண்டும்" என்பதை 'கறுப்பு நிறம்' குறித்துக் காட்டுகின்றது.

மேற்காட்டிய பண்புகளையே "எங்கள் தேசியக் கொடியிது" எனத் தொடங்கும் தமிழீழ தேசியக்கொடிப் பாடலானது வெளிப்படுத்தி நிற்கின்றது.

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களினதும், மாவீரர்களினதும் உழைப்பால், தியாகத்தால் உருவான, எட்டுத்திக்கிலும் எம்மினத்தின் மானத்தைக் காத்த தமிழ்த் தாயவள் மணிக்கொடியாக விளங்கும் எங்கள் தேசியக் கொடியை தமிழீழ மக்கள், மாவீரர் நாள் உட்பட தமது முக்கிய வைபவங்களில் எல்லாம், அதற்குரிய ஒழுங்குகளில் ஏற்றி, வணக்கம் செலுத்தி மரியாதை அளித்து வருகின்றார்கள். தமிழீழத்திற்கு வெளியில் வாழும் தமிழீழ மக்களும் இன்று தமிழீழத் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தும் தேசியக் கடமையை ஆற்றத் தொடங்கி விட்டார்கள். இது தமிழ் மக்களின் பிறப்புரிமை.

இந்த அடிப்படையில் தான் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, அது நடைபெற்ற மண்டபத்தின் நடுவே தமிழீழ தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் வரை அதைத் தடுக்கும் வகையில், இனத்துவேசத்தை வெளிப்படுத்தி வந்த சிறீலங்கா அரசியல்வாதிகள் சிலரும், கொழும்புப் பத்திரிகைகள் சிலவும் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது பறக்கவிடப்பட்டிருந்த தமிழீழத் தேசியக்கொடியை தமது இனத்துவேச பிரசாரத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமை கவலைக்கும், கண்டனத்திற்குமுரிய விடயமாகும். செய்தித் தாளின் ஆசிரியர் தலையங்கத்திலேயே முக்கியத்துவம் கொடுத்து எழுதக் கூடியளவுக்கு, தமிழீழத் தேசியக்கொடியை தமது இனத்துவேசத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

ஏறத்தாழ பதினொரு வருடங்களின் பின், சிறீலங்காவின் பிரதமர் சந்திரிகா காட்டிவரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களைக் குழப்பும் இனவாதிகளின் செயலே இதுவாகும். இவ்வாறான இனவாதிகளையும் உள்வாங்கியிருக்கும் சிறீலங்காவின் ஒற்றையாட்சியின் கீழ் பூரண அரசியல் இறைமையுடன் வாழமுடியாது என்பதையே இனத்துவேசக் கருத்துக்கள், தமிழ் மக்களுக்கு மீண்டுமொரு முறை உணர்த்தியுள்ளன. ■

### "எங்கள் தேசியக் கொடியிது"

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி - புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான'மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது (ஏறுதுபார்)
சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியக் கொடியிது (ஏறுதுபார்)

## தாயக மீட்புப் போரில் பெண் புலிகள் பெரும் பங்கு

"களங்களில் முன்னணியில் நின்று போரிட்டு தமிழ்த் தாயகம் பெறுவதில், விடுதலைப் புலிகளின் பெண்போராளிகளின் பங்கு அதிகரித்து வருகின்றது. இதற்காக தற்கொலைப்படைத் தாக்குதலிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்" இவ்வாறு, அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ஏ. எவ். பி. செய்தியாளரை மேற்கோள்காட்டி, வெரித்தாஸ் வானொலி ஒலிபரப்பிய செய்திக் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடலில் சமீபத்தில் லெப். கேணல் நளாயினி தலைமையில் கரும்புலிகள் நடாத்திய தாக்குதல் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. காங்கேசன் கடற்படைமுகாமிற்குள், ஊடுருவி பாரிய கடற்படை கப்பலைத் தகர்த்த முதல் பெண்கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி இன்னொரு எடுத்துக்காட்டு ஆகும். இப்படி பெண் புலிகளின் தாக்குதல் ஏராளம்.

யாழ்ப்பாணத்தில் ஒன்பது பொலிஸ் நிலையங்களை நிறுவி, வழக்குகளைப் புலிகள் தீர்ப்பதன் மூலம் மக்களுடன் நெருங்கிச் செயற்படுகின்றனர். இதில் ஆச்சரியம் முக்கியமான யாழ்ப்பாண காவல் நிலையத்தில் காவல் பணிமனை அதிகாரியாக இருப்பது கௌரி என்ற பெண். யாழ். நீதிமன்ற நீதிபதி கூட ஒரு பெண். இப்படி பெண்களின் பங்கை அடுக்கலாம் எனவும் அக்குறிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. ■

## ரஸ்ய போர்த் தளபாடங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன

சிறீலங்கா அரசினால் கொள்வனவுசெய்யப்பட்ட, பெருமளவு ரஸ்யத் தயாரிப்பு இராணுவத்தளபாடங்கள் சென்ற வாரம் கொழும்பை வந்தடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரஸ்யப் படையினரால் பயன்படுத்தப்பட்ட பல கோடிரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ■

## நடக்கும் சம்பவங்கள் உடனடியாக கலைப்படைப்பாக பதிவாகிறது

### ■ 'இன்னும் ஒருநாடு' வெளியீட்டில் செம்பியன்

"இங்கு நடைபெறும் சம்பவங்களை உடனுக்குடன் நாம் கலைப்பதிவாகப் படைக்கின்றோம். மேலைத்தேசங்களில் இப்படியல்ல; அங்கு எப்போதோ நடைபெற்ற போரை, அமைதியான காலத்திலிருந்துகொண்டு தான் படைக்கின்றார்கள்".

'இன்னும் ஒரு நாடு' முழு நீளப் படத்தின் வெளியீட்டுவிழா, அண்மையில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது, திரு. செம்பியன்செல்வன் நிகழ்த்திய மதிப்பீட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது, "அமைதியான காலத்தில் அவசரமில்லாமல் இருந்துகொண்டு, நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் பொருண்மியவளத்தை நிறையவைத்துக்கொண்டு படம் எடுக்கின்றார்கள் மேலை நாட்டார். இந்த மண்ணில் இந்த நிலையில்லை; இங்கு நடைபெறும் சம்பவங்களை உடனுக்குடன் நாம் பதிவுசெய்கின்றோம். அதனால், இங்கு உருவாகும் படங்கள் உயிர்த்துவமானவை; எந்த கற்பனையும் செய்யப்படாதவை என்பதை மேலைநாடுகள் போகப் போக உணர்ந்துகொள்ளும்; இதுதான் எமது வெற்றி.

தென்னிந்தியத் திரைப்படங்கள் எம்மைப் பாதித்துள்ளன. நாம் மிகத்தரமான -இறுக்கமான படங்களை ஓரளவு எளிமையான முறையில் படமாக்கும்பட்சத்தில், அவை மக்களைச் சென்றடையும்; மக்களின் பாதிப்பைப் பிழைசொல்ல முடியாது" என்றார். ■

## புதிய பயிர்வகைகள் விவசாயிகளுக்கு அறிமுகம்

### ■ த.பொ.மே.நி.திட்டம்

ஏற்றுமதிக்கு ஏற்றதும், வருமானம் தரக்கூடியதும், எமது தேவைகளை நிறைவு செய்யக் கூடியதுமான பயிர்வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவது என்று, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாட்டில் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் பிரதிப் பணிப்பாளர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், எதிர்கால விவசாய ஆராய்ச்சி, மண் ஆராய்ச்சி இதுவரை ஆராய்ச்சி செய்த பயிர்களுக்கான முன்னோடி நடவடிக்கைகள், கோப்பாய் உவர் நிலச் செய்கை விரிவாக்கம், தூய விதை உற்பத்தி மற்றும் விவசாய ஒருங்கிணைப்பு ஆகிய விடயங்கள் பற்றியும் திட்டமிடப்பட்டது. ■

# ஆழமான சிந்தனை தேவை

கார்த்திகை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. கார்த்திகை என்றதும் ஒவ்வொரு தமிழீழ நெஞ்சங்களிலும் மாவீரர் நினைவுதான் எழும். அவர்களது மூச்சுக் காற்றுத்தந்த பலத்தில்தான் தமிழீழதேசம் இலங்கைத்தீவில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த தன்னலமற்ற மாமனிதர் தங்கள் சந்ததிக்காய் தம்மையே தந்தமையினால்தான், சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் அரசியல், இராணுவ, பொருண்மிய அடக்குமுறைகளை எல்லாம்வென்று இன்று தமிழீழ மக்கள் தம்மை ஒரு நாட்டினம் (Nation) என உலகுக்கு உணர்த்தி நிற்கின்றனர்.

இம்முறை கார்த்திகை பிறக்கும்போது, இந்த தமிழீழ மக்கள் அரசியல் எதிர்காலம் குறித்து சிறீலங்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டிருக்கின்ற ஒரு சூழல் காணப்படுகின்றது. இது மாவீரர்கள் வழங்கிய தியாகங்களாலும் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையாலும் ஏற்பட்ட ஒன்று.

இன்றைய உலகின் பிரபல அரசியல் விஞ்ஞான எழுத்தாளரான அந்தனி எச். பேர்ச், ஒரு நாட்டினம் தன்னை தனிநாடாகப் பிரகடனப்படுத்துவதற்கு நான்கு நிபந்தனைகளைச் சுட்டிக்காட்டுகின்றார்.

1. அம்மக்களின் பிரதேசமானது அரசுடன் பலவந்தத்தினால் இணைக்கப்பட்டு, அங்குவாழும் மக்கள் தொடர்ச்சியான முறையில், அந்த இணைப்புக்குத் தங்கள் மன எதிர்ப்பைக் வெளிக்காட்டிவருதல். 2. அங்கு காணப்படும் ஆளும் அரசானது, அந்தப் பகுதியில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்காமலும், அந்தக் குடிமக்களுக்குத் தேசிய பாதுகாப்பை வழங்காமலும் விடுதல். 3. அரசின் அரசியல் நெறிமுறைகளால், அந்தப் பிரதேசத்தின் அரசியல், பொருண்மிய நலன்கள் பேணப்படாமல்விடப்படுவதன் மூலம், அந்தப் பிரதேசம் சீரழிவுக்குள்ளாதல். 4. பெரும்பான்மைத் தேசியத்தவரின் நலனைப்பேணுவதன் மூலம், அரசானது அந்தப் பிரதேசத்தினைப் புறக்கணித்தும் நிராகரித்தும் வருதல்.

இந்த நான்கும் காணப்படுமாயின், ஒரு நாட்டினம் தனிநாடாகப் பிரிந்துசெல்லலாம் என்பது முடிவு.

தமிழீழ மக்களைப் பொறுத்தமட்டில், இந்நிலை மிகத்தெளிவாக இனங்காணப்பட்டதினாலேயே உலகின் அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்கள், தமிழீழ மக்களை, - 'ஒரு அரசற்ற நாட்டினம்' (Nation without a state) என மிகவும் தெளிவாக இனங்காட்டி வருகின்றனர்.

இத்தகைய ஒரு சூழலில், ஆட்சியில் இருக்கும் அரசின் தலைவர், இச்சூழலை மாற்றியமைத்து அம்மக்கள் திருப்தி காணக்கூடிய அமைப்புமுறைகளைப் பற்றி சிந்திப்பதை 'தேச உருவாக்க முயற்சி'(Nation building process) என அரசியல் விஞ்ஞானிகள் கூறுவர். உதாரணமாக வேல்ஸ் இனத்தவர் பிரித்தானியாவில், தம்மை ஒரு தனியான நாட்டினமாகக் கருதமுற்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக, வேல்ஸ் இனமக்கள் நிர்வாகத்தில் அதிகம் இடம்பெறாமை என்பதை பிரித்தானிய அரசு உணரும்போது, நிர்வாகத்தில் அதிக இடத்தை வேல்ஸ் நாட்டினத்தவருக்கு வழங்கமுற்படுவதை இவ்வாறு கூறலாம். அதாவது, ஒரு நாட்டினம் என்ன என்ன குறைபாடுகளால் பிரிந்துசெல்லும் உரிமையை பிரயோகிக்க முற்படுகின்றதோ, அவற்றை இனம்கண்டு உண்மையான தீர்வுகள் காண்பதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம்.

பிரதமர் சந்திரிகா மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளையும் அவைகாட்டும் முரண்பாட்டுத் தீர்வுகளையும் (Conflict resolution methods) கல்வியால் கற்றுத்தேறியவர் என்றமுறையில், புதிய முயற்சிகளைப் பரீட்சிக்கின்றார். அதற்கு, சமாதானத்தை விரும்பும் விடுதலைப் புலிகளும் களம் அமைத்துக்கொடுக்கின்றனர்.

ஆனால், சிறீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத கலாச்சாரமும், மேலாதிக்க உணர்வுபெற்ற சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பும் பெரும்சவாலாக நிற்கின்றன என்பது யதார்த்தம். ஆகவேதான், தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளின், 'தேசிய பாதுகாப்பை வழங்கும் இராணுவ ஆற்றல்' தொடர்ந்தும், தீர்வுவரும் வரை உறுதியாகப் பேணப்படவேண்டிய தேவை தொடர்கின்றது.

இதனைத் தமிழீழ மக்களும், உலகத் தமிழர்களும் மனதிலிருத்தி, பேச்சுவார்த்தை முயற்சிகளைப் பிரச்சினைக்கான முற்றுப்புள்ளியாகக் கருதாது, இதுவும் தமிழீழ மக்களின் விடுதலைப் பயணத்தில் விடுதலைக்கான முயற்சிகளில் ஒன்று என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதே வேளை, சிறந்த கல்வியறிவாளரான பிரதமர் சந்திரிகாவின் நவீனமுறை உத்திகள் வெற்றியளிப்பதற்கு, அவரும் விருப்பு வெறுப்பற்ற முறையில் தமிழ் -சிங்களத் தேசியங்களின் அரசியல் யதார்த்தநிலையை நன்கு ஆழமாகச் சிந்தித்து இயங்கவேண்டிய தேவையுண்டு என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம். 'ஆழமான சிந்தனை' இருதரப்பினர்களுக்கும் தேவையானநேரம் இது! ■

---

"வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழீழத்தவரும் எமது நாட்டின் பிரசைகளே. அவர்கள் எமது மண்ணின் நிகழ்வுகளை வந்து பார்க்கவேண்டும். வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள், தமிழீழ மண்மீட்புப் போரில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகும். எமது நாட்டின் மண்மீட்புப் போரையும் நாட்டின் அரச கரும, நீதி, நிர்வாகச் செலவுகளையும் தமிழீழ மக்களே சுமக்கின்றார்கள். காவற்றுறை, நீதிமன்றங்கள், வைப்பகம் (வங்கி) இவற்றுடன் இன்று தமிழீழ நிர்வாகச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பணியாற்றுபவர்கள் யாவரும் பயிற்சி அளிக்கப்பட்டே சேவையில் அமர்த்தப்படுகின்றனர். இதற்கான செலவுகளின் தேவை விரிந்துகொண்டேபோகின்றது. தமிழீழத்திற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் எல்லோரும் எமது தாய்மண்ணிற்காக ஒருமித்துப் பங்களிப்பார்களேயானால், விற்பனை வரியைப் போராட்டத்தில் பல துன்பங்களின் மத்தியில் தாய்மண்ணில் வாழும் மக்களிடம் விதிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படாது".

- தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

---

# செயல்முறை


- நாக. பத்மநாதன்

டிக் டிக் டிக் டிக்...

சுவர் மணிக்கூடு ஓடிக்கொண்டே இருந்தது.
ஒரு வினாடிக்கு ஒரு டிக் என அது ஓடிக்கொண்டே இருந்தது.
கணக்கிட்டேன்.
இவ்விதம் ஒரு நிமிடத்திற்கு அது காட்டவேண்டிய ஒலி - 60
ஒரு மணித்தியாலத்திற்கு? இந்த அறுபதை அறுபதால் பெருக்க -3600
ஒரு நாளைக்கு? இதனை 24 ஆல் பெருக்க - 86,400
அப்படியானால், 365 நாள்கொண்ட ஒரு வருடத்தில்? இதைப் பெருக்கிப்பார்க்க வந்தது -3,15,35,000!
அப்பாடா! மூன்றுகோடியே பதினைந்து இலட்சத்து முப்பத்தையாயிரம் வினாடி அல்லது ஒலி!
இது முடியுமா?
மணிக்கூட்டின் சிறு சிரிப்புக்கேட்டது.
என்னால் முடியும் என்றது அது.
எவ்விதம்?
நான் கூட்டிப்பார்ப்பதில்லை வரவரச்செய்வேன்.
மனிதர்களைப்போல வருங்காலத்தைக் கூட்டிப்பார்த்து நான், ஏங்குவதில்லை.
ஒரு வினாடிக்கு ஒரு டிக் மட்டுமே நான் செய்வது.
"இது என்னால் சுலபமாய் முடியும்".
ஏங்கி நின்ற என்னைப்பார்த்து அது மீண்டும் கூறிற்று
"மனிதனே! நீ செய்ய இருப்பதையெல்லாம் வீணேகூட்டிப் பார்க்காதே! வரவர ஒவ்வொன்றாய்த் தெளிவோடுசெய். எவ்வளவையும் செய்ய... உன்னால் முடியும்"

# தமிழீழ நீதிமன்றம்

## ஓராண்டு சேவையுடன் மக்களின் இதயத்தை வென்றுவிட்டது!



தமிழீழ நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு -அதன் மூலம் தமிழீழ சட்டம் உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தப்பட்டு, ஆவணி மாதத்துடன், ஓராண்டு முடிவடைந்துள்ளது.

தனியரசுக்கான ஒரு அலகு -மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட நீதிநெறிகளை நிலைநாட்டி மேற்பார்வை செய்ய வேண்டிய ஒரு அமைப்பு -மக்களால் நன்கு வரவேற்கப்பட்டுள்ளதுடன், அவர்களது மனதிலும் இடம் பிடித்துக் கொண்டுவிட்டது.

> "முன்னைய சிங்கள நீதிமன்றங்களில், வழக்குகள் அநாவசியமாக இழுத்தடிக்கப்பட்டதுடன், வழக்காளிகள் பலவகையில் பணச்செலவுகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்".

**இக்குறுகிய காலத்தில் தமிழீழ நீதிமன்றுகளின் செயற்பாடுகளில் கிடைத்த வெற்றி, உண்மையில், புலிகள் இயக்கத்தலைமையின் ஆட்சித்திறனுக்கு ஒரு உதாரணமாகும்.**

1993 ஆவணி 21 ஆம் திகதி சுண்ணாகத்தில் முதல் நீதிமன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று அதன் ஓராண்டு முடிவில், யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் ஆறு நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன.

மாவட்ட நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கிய பின், **மேன்முறையீட்டு நீதிமன்றம்** ஒன்றின் தேவையும் எழுந்தது.

யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றுடன், ஜனநாயக முறையிலான நீதிநிருவாக அமைப்பு மேலும் ஒரு படி முன்னேறியுள்ளது. இந்த மேன்முறையீட்டு நீதிமன்று மூன்று நீதியாளர்களைக் கொண்ட உயர் அமைப்பாக செயற்படுகின்றது; மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை உறுதிப்படுத்தக்கூடிய அல்லது மாற்றியமைக்கக்கூடிய அதிகாரமிக்க உயர்பீடமாக செயற்படத் தொடங்கியுள்ளது. தற்போதைய நிலையில் வன்னி மாவட்டத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றமாகவும் இந்த யாழ். மேன்முறையீட்டு நீதிமன்றமே இயங்குகின்றது.

**தமிழீழ விடுதலைப்போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து, சிங்கள அரசின் சிவில் நிருவாகம் தமிழர் நிலத்தில் தடுத்து நிறுத்தப்படும் வரை, சிங்கள அரசின் நீதிமன்றங்கள் சிங்கள பௌத்த பேரின வாதத்தின் ஒரு அடக்கு முறைக் கருவியாகவே -தமிழர்களைப் பொறுத்தவரையில் இருந்தது. தமிழரின் தேசிய எழுச்சியை நசுக்குவதிலும் தமிழ்த் தேசாபிமானிகளுக்கு தண்டனை வழங்குவதிலுமே சிங்கள நீதிமன்றங்கள் மும்முரமாக நின்றன. நீதியை நிலை நாட்டல் என்ற போர்வையில் தமிழினத்தின் சனநாயக உரிமைகளைப்பறிப்பதிலும் -தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள அரசு இழைத்து வந்த மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்துவதிலுமே, சிங்கள நீதிமன்றங்கள் பெருமளவு நேரத்தைச் செலவிட்டன.**

ஆனாலும், புலிகள் இயக்கத்தின் இராணுவபலத்தை படிப்படியாக வளர்த்த எமது தேசியத் தலைவர் **பிரபாகரன்** அவர்கள், தமிழ் மக்களது நலனைப் பாதுகாப்பதற்காகவென புதிய நிர்வாக அலகுகளை உருவாக்கி, தனியரசுக்கான கட்டுமானங்களில் ஈடுபடத் தொடங்கினார். அதில் ஒன்று தான் நீதிநிருவாகத்துறையின் உருவாக்கம் ஆகும்.

நீதிநிருவாகத்துறையினர், தமிழீழத்தின் அனைத்து மக்களினது நன்மையையே முழுதான நோக்கமாகக் கொண்டு, ஒரு சட்ட வரைபை வரையத் தொடங்கினர்.

இந்த சட்டவரைபு சமூகநீதியை, ஆண் -பெண் சமத்துவத்தை அடித்தளமாகக் கொண்டமைந்துள்ளது. இதில் குறிப்பாக பெண்களது உரிமைக்கும் -பாதுகாப்புக்கும் சட்டரீதியான உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சமூகத்தில் பெண்களது அந்தஸ்தை உயர்த்துவதிலும், அவர்களுக்கு சமவாய்ப்பும் சமவுரிமையும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதிலும் இந்த சட்ட வரைபு, ஒரு வரலாற்றுப்பா த்திரத்தை வகிக்கின்றது. இச் சட்டவரைவு நூலுருப் பெற்று பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ சட்டக் கல்லூரி ஒன்றையும் நிறுவும்படியும் பணிப்புரை வழங்கிய தலைவர் அவர்கள், போராளிகளே சட்டவாளர்களாகவும் -நீதியாளர்களாகவும் பணியாற்றும் வகையில் புதுமையைப் புகுத்தத் திட்டமிட்டார்

**நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கி தமிழீழ சட்டக்கல்லூரியில் பட்டம் பெற்ற போராளிகள், நீதியாளர்களாக -சட்டவாளர்களாக -பணியாற்றத் தொடங்கிய போது, பலர் அதிருப்திக் கண்கொண்டே அதை நோக்கினர். ஆனால் காலம் செல்லச்செல்ல போராளிகளான நீதியாளர்களினதும் சட்டவாளர்களினதும் நேர்மையான-நடுநிலைமையான-சேவைகளைக் கண்டு தமது பழைய கருத்துக்களை மாற்றத் தொடங்கியதுடன், அவர்களது திறமையான பணிகளைப் பாராட்டவும் செய்தனர்.**

இந்த நீதியாளர்கள், சட்டவாளர்களுள் கணிசமான தொகையினர் பெண்கள் என்பதும், முற்போக்கானதும் சமத்துவத்தை நிலைநிறுத்துவதாகவும் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. தமிழீழ நீதிமன்றங்கள் செயற்பட தொடங்கியதிலிருந்து மக்களின் முறைப்பாடுகள் மிக விரைவாகத் தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன என்பது , மக்களே ஏற்றுக் கொண்ட விடயமாக மாறிவிட்டது.

முன்னைய காலத்தில் சிங்கள நீதிமன்றங்களில் வழக்குகள் அநாவசியமாக இழுத்தடிக்கப்படுவதுடன், வழக்காளிகள் பலவகையில் பணச்செலவுகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இன்று நிலைமை அப்படியல்ல. விசாரணைகள் விரைவாக நடந்தேறுவதுடன், பணவிரயங்களும் தடுக்கப்பட்டுள்ளன.

> "இன்றைய தமிழீழ நீதிமன்றுகளில், விசாரணைகள் விரைவாக நடந்தேறுவதுடன், பணவிரயங்களும் தடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஓராண்டிலும், தமிழீழ மாவட்ட நீதிமன்றுகள் ஆறிலும் பதிவுசெய்யப்பட்டவழக்குகளின தொகை, மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஆறுபத்தி மூன்று (39-63) ஆகும். இதில் தீர்ப்பு வழங்கப்பட்டவை, ஆயிரத்து அறுநூற்று பதின்மூன்று (1613) ஆகும். இதேவேளை மாவட்ட நீதிமன்றுகளின் தீர்ப்புகளில் அதிருப்தி கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் தொகை நாற்பத்தேழு (47) ஆகும் . இதில் முப்பது மேன்முறையீடுகள் தீர்த்துவைக்கப்பட்டு விட்டன. உண்மையில் இவை வேகமான செயற்பாடுகள் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும், நீதிமன்றுகளின் தொகை அதிகரிக்கப்படும் போது இந்த நிலைமைகள் இன்னும் வளர்ச்சிதென்படும்.

தமிழீழ காவல் துறையும், தமிழீழ- நீதிநிருவாகத்துறையும், மீட்கப்பட்ட எமது மண்ணில் சட்டம் -ஒழுங்கைப் பேண வெற்றிகரமான முறையில் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், சமூக அமைதியை உருவாக்கி, மக்கள் மத்தியில் நீதி நிலைநிறுத்தப்படுவதற்குப் பெரும் பங்காற்றுகின்றன என்பது, வெளிப்படையான உண்மை. ■

# இராணுவ நடவடிக்கையால் ஒரு கோடி ரூபா நட்டம்

பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு ஒரு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

1990 -ம் ஆண்டுக்குப் பின் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்ால், மேற்படி சங்கங்களிற்கு ஒரு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களையும் இழந்துள்ளனர்.

இந்த இழப்புத்தொடர்பாக, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை தென்னை வள) ஊடாக யாழ். அரச அதிபருக்கும் திட்டப் பணிப்பாளருக்கும் வடகிழக்கு மாகாணசபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ■

# "விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு உண்டு இந்த உண்மை கசப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்"

- முன்னாள் பிரிகேடியர் நாரத விக்கிரமரத்தினா

இன்றைய போரை நீடிக்க யார் விரும்புகின்றார்கள்? அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்கள் யார் என்றால்,

1. போர்த்தளபாடம், கருவிகள் இவற்றின் இறக்குமதியாளர்கள்.
2. போர் நீடிப்பதால், இலாபம் அடையும் ஊழல் அரசியல்வாதிகள்.
3. இராணுவத்தில் சிறுபான்மையாக உள்ள சில உயரதிகாரிகள்.

இப்படி கேள்வியும் எழுப்பி, விடையும் அளித்திருப்பவர் ஒரு அரசியல்வாதியல்ல; ஒரு முன்னாள் சிறீலங்கா இராணுவ பிரிகேடியர் நாரத விக்கிரமரத்தினா. (ஐலண்ட் 09. 10. 1994) செய்தித்தாளில் ('Peace -the need of the hour') என்று மகுடமிட்டு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் அதில் தெரிவிக்கையில்:

"ஒரு போரை இறுதி வரை நடாத்தி, அதனை ஒரு தர்க்க ரீதியான முடிவுக்குக்கொண்டுவர அடிமட்ட இராணுவச் சிப்பாயும், உயர்மட்ட இராணுவத் தளபதிகளும் போரின் இரு முக்கிய குறிக்கோள்களை அறிந்திருக்க வேண்டும். அரசியல், இராணுவ குறிக்கோள்களே அவைகளாகும். நீண்ட வேதனை நிறைந்த பத்து வருடங்களாக நடைபெறும் போரில் இராணுவ சிப்பாய்களும், இராணுவ தளபதிகளும் இராணுவ குறிக்கோள்களைத் தெரிந்திருந்தார்கள். ஆனால், இந்த நீண்ட வேதனை நிறைந்த 10 ஆண்டுகளில் இராணுவச் சிப்பாய்களும், இராணுவத் தளபதிகளும் போரின் அரசியல் குறிக்கோள் எது என்பது, அவர்களுக்குப் புரியாமல் இருந்தது. காரணம் அரசியல் குறிக்கோள், அரசியல் தலைவர்களது சுயநலம் காரணமாக காலத்திற்குக்கு காலம் மாறிக்கொண்டே இருந்தது.

இதன்பலாபலன் என்னவென்றால், கடந்த 10 ஆண்டுகளாக குறிக்கோள் ஒன்றும் இல்லாமல் போர் இழுபட்டுக்கொண்டு போயிற்று. இராணுவத்தளபாட வியாபாரிகள் கோடிக்கணக்கான பணத்தைச் சம்பாதித்துக்கொண்டார்கள். ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்; அல்லது வீடு வாசல்களை இழந்தார்கள்; பல ஆயிரம் இராணுவ சிப்பாய்கள் இறந்தார்கள். இன்னும் பல ஆயிரம்பேர் அங்கவீனர்களானார்கள்; சிலர் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.

கடந்த பத்து ஆண்டுகளாக நாங்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ வழியையே தேடியிருக்கின்றோம். ஒரு கட்டத்தில் இந்திய அமைதிப்படையை அழைத்து, ஒரு இராணுவத் தீர்வின் மூலம் சமாதானத்தைக்கொண்டுவர முயற்சித்தோம். இது போரை சர்வதேசமயப்படுத்தவே உதவியது. நாங்கள் அல்லது இந்திய இராணுவத்தினர் இதில் வெற்றி பெற்றோமா?

**பயங்கரவாதம் சரி; கிளர்ச்சி சரி இரண்டும் 'மக்கள் ஆதரவை' நம்பியே செயற்படுகின்றது. விடுதலைப் புலிகளுக்கு இந்த 'மக்கள் ஆதரவு' இருக்கின்றது. இது எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும் இந்த உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த 'மக்கள் ஆதரவை' சிறீலங்கா அரசு இன்றுவரை பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டது.**

அதேநேரத்தில் பேச்சுவார்த்தைகள் நடக்கும்போது, விட்டுக் கொடுப்புக்களும், சலுகைகளும் இரண்டு தரப்பிலிருந்தும் செய்யவேண்டிவரும். மேலும் ஒவ்வொரு இனத்தினதும் உயிர்வாழும் உரிமையும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இதேநேரத்தில் பாதுகாப்புப் படையினரது, கௌரவமும் இறுதி உடன்பாடு காணப்படும்போது, கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

சமாதானநிலை ஏற்படும்போது, போர்புரிய மட்டுமே உருவாக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட ஆயுதப்படையின் வலிமையை நாட்டின் நிர்மாணப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இராணுவம் நாட்டு நிர்மாணத்தில், அரசுக்கு ஒரு பெரிய சொத்தாக விளங்கும்.

அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளின் தேசிய கட்டுமானப்பணியில், ஆயுதப்படை வகிக்கின்ற முக்கியத்துவத்தை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ■

## காமினியுடன் முன்னாள் இரு அமைச்சர்கள் உட்பட

# 56 பேர் கொல்லப்பட்டனர் 300 பேர் வரை காயமடைந்தனர்

**23. 10. 1994** ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற குண்டுவெடிப்பில், சிறீலங்காவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா உட்பட, 56 பேர் கொல்லப்பட்டும் 300 பேர்வரை காயமடைந்தும் உள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்துள்ளன. கொல்லப்பட்டவர்களுள் முன்னாள் உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி, தொழிற்றுறை அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜயசேகரா ஆகியோரும் உள்ளடக்கப்படுவர். இவர்களுடன், 18 மெய்ப்பாதுகாவலர்களும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தவர்களும் கொல்லபட்டுள்ளனர். கொழும்பு கிராண்ட்பாசில், நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா உரையாற்றிவிட்டு, இருக்கையில் அமரச்சென்ற வேளையிலேயே, இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளதாக அறியப்படுகின்றது.

நள்ளிரவு 12. 15 மணிக்கு நடந்த இக்குண்டுவெடிப்புக் குறித்து, பல ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றபோதும், இதனை மேற்கொண்டோர் யாரென உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. தற்கொலைப் பாணியிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும், அருகில் இருந்த இரண்டு மாடிக்கட்டிடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட பெண் ஒருவரின் தலையைக்கொண்டு அவரே இதனைச் செய்திருக்கலாம் எனவும் சிறீலங்காப் பொலிசார் ஊகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இக்குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஊரடங்குச்சட்டமும் அவசரகாலச்சட்டமும் அமுல்படுத்தப்பட்டது. இக்குண்டுவெடிப்புத் தொடர்பாக முழு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், இந்நிலையில் விடுதலைப் புலிகள் தான் இதனைச் செய்தார்கள் என, முன்கூட்டியே தெரிவிக்கமுடியாது எனவும் சிறீலங்கா தகவல்துறை அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா கருத்துத் தெரிவித்துள்ளார். முன்னர் உடனுக்குடன் தடயங்களை அழித்ததுபோல், இம்முறை அவ்வாறு இருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காமினிக்கு பல எதிரிகள் இருந்தார்கள் எனத் தெரிவித்த பி. பி. சி. சிங்களச் சேவையின் செய்தியாளர், விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டுவது, வசதியாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். நடைபெறும் பேச்சுவார்த்தையை இருதரப்பும் மகிழ்ச்சியுடனும், வெற்றியில் நம்பிக்கைகொண்டும் தொடரும் இச்சந்தர்ப்பத்தில் பேச்சுக்களையும் தேர்தலையும் . குழப்பும் விதத்தில் இச்செயலை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என நம்பமுடியாமல் உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமாதானப்பேச்சுக்களை குழப்பவோ, அன்றி காமினி மீதான குரோதத்தைத் தீர்த்துக்கொள்ளவோ, அன்றி இரண்டையும் நோக்காகக்கொண்டோ, இதனைச் சிலர் செய்திருக்கலாம் எனவும் செய்திகள் உலாவுகின்றன. சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் உள்ள காமினி திசாநாயக்காவுக்கு எதிரான பட்டியலின் நீளம் மிகப்பெரியது. அவற்றுள்,

1. 17 ஆண்டுகால முன்னைய ஆட்சியில் நிகழ்ந்த சிங்கள இளைஞர்களின் படுகொலைகள்.
2. தென்னாசியாவிலேயே பிரபல்யம்வாய்ந்த தமிழ் மக்களின் கல்விச்சொத்தான யாழ். நூலக எரிப்பு.
3. மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது, தமிழ் மக்களின் தாயக பூமியில் மேற்கொண்ட அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகள்.
4. பிரேமதாசவின் ஆதரவாளருடன் தொடர்பான குரோதங்கள்.
5. அத்துலத்முதலியுடன் சேர்ந்து உருவாக்கிய புதிய கட்சியையும், அதன் ஆதரவாளர்களையும் நட்டாற்றில் கைவிட்டு, பதவியைத் தேடிக் கொண்டமை.
6. அமைச்சராக இருந்தபோது தேடிக்கொண்ட கோடிக்கணக்கான சொத்துக்களினால் ஏற்பட்ட, சிங்கள மக்களின் வெறுப்பு.
7. கடைப்பிடிக்கப்பட்டுவந்த அரசியல் மரபுக்கெதிராக, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஓரங்கட்டிவிட்டு, எதிர்க்கட்சித் தலைவராக முடிசூடிக்கொண்டமை ஆகியவை முக்கியமானவை.

இக்குண்டுவெடிப்பிற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என, தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். யாழ். சென்று, கொழும்பு திரும்பிய செய்தியாளர்கள் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இச்சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்ததாக அறிவித்தனர். இது ஒருபுறமிருக்க, கடந்த திங்கட்கிழமை யாழ். செல்லவிருந்த பேச்சுவார்த்தைக் குழு, தமது பயணத்தை காலவரையின்றி பிற்போட்டுள்ளது.

இக்குண்டுவெடிப்பு பேச்சுவார்த்தையை பின்தள்ளியிருப்பதை ஒத்துக்கொள்வதாகத் தெரிவித்த லயனல் பெர்னாண்டோ, "அதன் அர்த்தம் இதனை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதல்ல, எனவும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 9 ஆம் நாள் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல், குறித்த நாளில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசு உடன் காணமுடியாது

## ராவய ஆசிரியர் தெரிவிப்பு

"இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை, புதிய அரசாங்கத்தினால் உடனடியாக முன்வைக்க முடியாது" என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

"அரசியல் யாப்பின்படி ஜனாதிபதியிடம் சர்வ அதிகாரம் இருப்பதினால், அவர் இம்முயற்சிகளைக் குழப்பலாம் என்றும் எனவே புதிய அரசாங்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டும் வரை இதே இழுபறி நிலையில் தான் செயல்படும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடலாம் என்றும், இன்று வடபகுதி மக்களின் தபால், போக்குவரத்து, தொலைத்தொடர்பு மற்றும் மின் வசதிகளை அம்மக்களுக்கு வழங்கி அவர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்த வழி வகுக்க வேண்டும் என்றும் இதனை அரசாங்கம் இன்று செய்யும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரினால் நாடு பெரிதும் பாதிப்பு அடைந்ததே தவிர, நன்மையொன்றும் ஏற்படவில்லை.

அரசியல் தீர்வு காணும் போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஐ. தே. க இருந்தால் இதனை அவர்கள் குழப்பிவிடுவார்கள் என்றும், எனவே இதனை தவிர்ப்பதற்காகவே ஜனாதிபதி அதிகாரம் புதிய அரசாங்கத்திற்கு கிடைத்த பின்னர் இதனைச் செய்வது மிக உசிதமான நடவடிக்கையாக அமையும் என மேலும் தெரிவித்தார். ■

## எம்பிலிப்பிட்டிய சம்பவம்

# அதிபர் இடைநிறுத்தம்

எம்பிலிப்பிட்டியவில் முப்பத்தியொரு மாணவர்கள் காணாமல் போனமை தொடர்பாக, நேரடியாகத் தொடர்புகொண்ட பாடசாலை முன்னாள் அதிபர் தயாநந்த கலப்பதி, வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணத்தை முன்வைத்து, தனது பாடசாலையில் ஒரே வகுப்பைச் சேர்ந்த முப்பத்தியொரு மாணவர்களை இராணுவத்தினரிடம் இவர் ஒப்படைத்தார் என்றும், அம்மாணவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை என்றும் கூறப்பட்டுவருகின்றமை தெரிந்ததே.

தற்போது அவர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, சப்பிரகமுவா மாகாணக் கல்வித் திணைக்களத்தில், உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியதாகவும், இவர் நிதிமோசடி தொடர்பாக இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார். ■

## நெய் உற்பத்தி

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டத்தினால், குமுழமுனையில் தொடங்கப்பட்டுள்ள பால் சேகரிப்பு நிலையத்தில், சேகரிக்கப்படும் எருமைப்பாலில் இருந்து பொறி மூலமாக நெய் உற்பத்தி செய்யும் திட்டம் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகின்றது.

இந்த நிலையத்தில், உற்பத்தி செய்யப்படும் நெய் போத்தல்களில் அடைக்கப்பட்டு, விற்பனை செய்ப்படுகின்றது. அத்தோடு, ஆடைநீக்கப்பட்ட பால் வேறாக விற்பனை செய்யப்படுகின்றது.

## கொழும்பு நகரப் பகுதியில்

# இனவாத சுவரொட்டிகள்

சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் கொழும்பு நகரப் பகுதியில் இனவாதச் சுவரொட்டிகள் பரவலாகக் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சுவரொட்டிகளில், "தமிழனுக்கு நாடு கொடுக்கிறாய், முஸ்லிமுக்கு துறைமுகம் கொடுக்கிறாய், சிங்களவருக்கு பாணும் பருப்பும் தான் கொடுக்கிறாய்" என்ற துவேச வாசகங்கள் காணப்படுகின்றன.

தற்போதைய ஆளும் கட்சிக்கு, எதிராக சிங்கள மொழியில் ஐ. தே. கட்சியினரால் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. ■

# 30 மில். பெறுமதியான பொருள்கள் கப்பலில் களவாடப்பட்டது

இரண்டாம் ஈழப்போரில், ஆனையிறவு, பூநகரி போக்குவரத்துப் பாதைகள் தடுக்கப்பட்டதன் பின்னர், கப்பலில் இருந்து பொருட்கள் கொண்டுவரும் முயற்சிகளில் 92 மார்கழி மாதம் வரை, 30 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் கையாடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை அத்தியாவசிய சேவையாளர் ஆணையகமும், துறைமுக அதிகார சபையும் ஆரம்பித்துள்ளன. இவ் விசாரணைகளில், கடற்படையினரும், இராணுவத்தினரும் உள்ளடங்குவர் எனவும் அறிய வருகின்றது. ■

# இராணுவத்திலிருந்து விலக சிப்பாய்கள் பலர் விருப்பம்

## — பி.பி.சிக்கு கடிதம்

சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பலர் தம்து பதவிகளில் இருந்து விலகத் தயாராக இருப்பதாகவும், இதற்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்பட்டால் கூட அதனை வழங்க தயாராக இருப்பதாகவும் பி. பி. சி சிங்கள சேவைக்கு கடித மூலம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்குக்கு ஏழை மக்களின் பிள்ளைகளை அனுப்பிவிட்டு, செல்வம் படைத்தவர்களின் பிள்ளைகள் சூதாட்டங்களில் ஈடுபடுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். உயர் அதிகாரிகள் இலட்சக்கணக்கான பணத்தை இலஞ்சமாகப் பெற்றுவருவதுடன், ஆயுத தரகுப்பணத்தைக் கோடிக்கணக்காகப் பெற்று வருவதே, இப் போர் தொடர்ந்து நடத்த வேண்டும் என அவர்கள் விரும்புவதன் நோக்கம் என தெரிவித்த இராணுவத்தினர், எனவே தாம் இவ் அநாவசிய போரில் இருந்து விடுதலை பெற விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

புதிய அரசாங்கம் தப்பியோடிய படையினர் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என தெளிவாக இன்னும் தெரியாமல் இருப்பதாகவும், ஆகவே இது குறித்து ஒரு தெளிவானதிட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றும், இதனைத் தொடர்ந்து இராணுவத்தில் இருந்து சுயமாக விலக விரும்புவர்களை விலகுவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# இந்திய மேலாண்மைக்கு எதிராக கிளர்ந்தெழும் இன்னொரு விடுதலை அமைப்பு

‘குமுறும் எரிமலைமேல் குந்தியிருக்கும் இந்தியா’ என (12. 11. 1993) ஆம் நாள் வெள்ளி மஞ்சரியில் குறிப்பிட்டதுபோலவே இப்பொழுது இந்தியாவெங்கும் விடுதலைக் குரல்கள் பல்வேறு வடிவங்களிலே ஒலிக்கின்றன. காஸ்மீரிலோ இந்தியப் படைகளின் கொடுமைகள் உச்சமடையும் நிலையில், மக்களின் விடிவிற்கான போராட்டம் வலுக்கின்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலோ, ‘மாநிலங்களுக்குள்ளே மாநிலங்கள்’ கோரி, அரசியல் கோரிக்கைகள் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களாக மாற்றம்பெறுகின்றன. பிகார் மாநிலத்தின் ‘யார்க்கண்ட்’ மாநிலக் கோரிக்கை, உத்தரப்பிரதேச மலைவாழ் மக்களின், ‘உத்தாரகண்ட்’ மாநிலக் கோரிக்கைகள் வலுவடைகின்றன. அதேவேளை, இந்தியாவின் வெகுதூரப் பிரதேசமான வடகிழக்கு மாநில மலைப்பகுதியிலோ **முழு அளவிலான தேசிய விடுதலைப் போராட்டங்கள் பரிணமிக்கின்றன.** அண்மைக்காலமாக இந்திய இராணுவத்திற்கு நாகலாந்து, அசாம், மணிப்பூர், திரிப்புரா பகுதிகளில் ஏற்பட்டுவரும் இழப்புக்கள் பெருத்த அதிர்ச்சியை இந்திய ஆளும் வர்க்கத்திற்கு இப்போது ஏற்படுத்திவிட்டன.

> 'அடக்குமுறையென்னும் அத்திவாரத்தில் கட்டிய இந்தியா எனும் கோட்டைக்குள் பாரிய வெடிப்புக்கள் பலவிடங்களிலே தோன்றுகின்றன. இப்போது வடகிழக்குப் பகுதியில் பெரும் வலுவுடன் கிளர்ந்தெழுகின்றது நாகா மக்களின் விடுதலை அமைப்பு'.

### விடுதலைக்குரல் எழுப்பிநிற்கும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள்

‘ஏழு சகோதரிகள்’ எனவழைக்கப்படும் இவ்வடகிழக்கு மாநிலங்களுக்கும் (அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், அசாம், மேகலாயா, மிசோராம், திரிப்புரா, நாகலாந்து) இந்தியாவிற்குமான உறவு மயிரிழையில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சிவிளைவித்த துரோகம் காரணமாக இந்தியாவோடு எவ்வகையிலும் எவ்விதத்திலும் தொடர்பற்ற இம்மலைப்பகுதி வாழ் தொன்மை மக்கள் இன்று இந்திய அரசின் பிடியிலே சிக்கித்தவிக்கின்றனர். தனது முதலாளித்துவப் பொருண்மிய நலன், தனது எல்லைப்பகுதியின் பாதுகாப்புக்கருதி ஒரே இந்தியா என்கின்ற தேசியப் போர்வைக்குள் இம்மக்களைப் போர்த்தி, இந்தியப் பிரசைகள் என்கின்ற பொறிக்குள் சிக்க எடுத்த முயற்சிகள், இப்போது மிகமோசமான பின்னடைவுகளைச் சந்திக்கின்றன. தமக்கான தனியான தேசிய அடையாளங்கள், பண்பாடு, கலாச்சாரத்தைக்கொண்டுள்ள மக்கள், இன்று கிறித்தவ மிசனரிமார் பணிகாரணமாக, பெரும்பான்மை கிறித்தவராக ஆங்கில அறிவு பெற்றோராக உள்ளனர். இவர்கள் இன்று தத்தம் மத்தியிலே குடியேற்றப்படும் நேபாள, பங்களாதேச, மியன்மார் அகதி மக்களை வெளியேறுமாறு -மண்ணின் மைந்தர்களை அழிக்கும் முயற்சி இதுவெனக்கூறி, இந்திய அரசிற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இம்மக்களுக்கு இனவழி உறவுகாரணமாக மியன்மாரும், இந்திய எதிர்ப்புக்கொள்கை காரணமாக பங்களாதேசமும் ஏன் பாக்கித்தானும் உதவிசெய்வது இந்திய அரசிற்கு மீளாத்தலைவலியாகிவிட்டது.

பல்வேறு வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இப்போராட்ட அமைப்புக்களின் புதிய பரிணாம வளர்ச்சியின் வீச்சுக்கள், இப்போது பல்வேறு வழிகளிலும் வெளிப்படத் தொடங்கிவிட்டன. அண்மையில் கடந்த ஆகஸ்ட் 15 ஆம் நாள், இந்தியா முழுமையும் சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் நாளைக்கொண்டாடியபோது, வடகிழக்கு மாநிலங்களில் வெளியார் வருகை எதிர்ப்புக் கறுப்பு நாளாக பதினொருமணிநேர முழுக்கதவடைப்பு நடைபெற்றது. பல மாநிலங்களில் தேசியக் கொடியைத்தன்னும் அவ்வம் மாநில முதல்வர்களால், ஆளுநர்களால் ஏற்ற முடியவில்லை. இப்பகுதியின் சகல மாணவர் அமைப்புக்களையும் உள்ளடக்கிய **NESO** எனப்படும் வடகிழக்கு மாணவர் அமைப்பால், இவ்வெதிர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசிற்குப் பெருத்த அவமானத்தை இச்சம்பவம் ஏற்படுத்திவிட்டது. இத்தகைய மக்கள் முன்னணி அமைப்பு எதிர்ப்புக்கள் ஒருபுறமிருக்க, இப்பகுதியின் ஒரு சில போராட்ட அமைப்புக்களின் வளர்ச்சி, இந்திய அரசு பெருத்த தொல்லைகளை இப்பகுதிகளில் விரைவில் சந்திக்கப்போகின்றது என்பதை விளக்கி நிற்கின்றது.

### சருவதேச பிரபல்யமிக்க நாகா விடுதலை அமைப்பு

ஏழு மாநிலங்களிலும் பல்வேறு விடுதலை அமைப்புக்கள் இன்றிருந்தாலும், நாகலாந்து, மணிப்பூர் பகுதிகளில் நிலைகொண்டு, இயங்கிவரும் **நாகலாந்து தேசிய சோசலிசப் பேரவையின் (NSCN -National Socialist Council of Nagaland)** வலுவான வளர்ச்சி இங்கு குறிப்பிடவேண்டியதொரு புதியதொரு பரிமாணமாகின்றது. இப்பேரவை 1988 ஆம் ஆண்டு இருபிரிவாகப் பிரிந்தபோது, இந்திய அரசு இது வலுவிழந்துவிடும் என அப்போது பெருமகிழ்ச்சிகொண்டது; அதனை ஊக்குவித்தது. ஆனால், நடந்ததோ வேறு. இன்று பலமுள்ள பாரிய அமைப்பாக நாகலாந்து சோசலிசப் பேரவை (ஐசாக் முரயாப் பிரிவு) விளங்குகின்றது. இது ஆங்கிலத்தில், **NSCN IM NSCN Issac Muriah** என அழைக்கப்படுகின்றது. முன்னர் நாகலாந்திற்கு விடுதலைகோரிப் போராடிய பிசோ **(A. Z. Phizo)** என்கின்ற தலைவர் 1975 ஆம் ஆண்டளவில், இந்திய அரசோடு சில்லோங் உடன்பாட்டில் கைச்சாத்திட்டு, போராட்டத்தைக் கைவிட்டபின், அவரது துரோகத்தைக் கண்டித்து 1980 அளவில் ஐசாக் சிசிசுவு **(Issac Chi Shiswu)**, முவியா **(T. Muivah)**, கப்ளாங் **(C. S. Kaplang)** என்கின்ற மூவராலுமே **NSCN** தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது. எனினும், இனக்குழுச் சிக்கல் காரணமாக 1988 அளவில் இயக்க உள்மோதலின்பின், கப்ளாங் தலைமையில் இன்னொரு பிரிவு **(NSCN -K)** உருவானது. ஆனால், இப்பிரிவு இன்று செயலிழந்துபோய்விட்டது. **NSCN (I. M.)** இப்பிரிவே இன்று பலமிக்கதாகிவிட்டது. இது முன்னைய வரலாறு.

இன்று **NSCN (I. M.)** அமைப்பு சருவதேசப் பிரபல்யமிக்கதொரு அமைப்பு -நாகா பூர்வீக மக்களின் வாழ்விற்காகப் போராடும் அமைப்பென உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு -இன்று பாங்கொக், காத்மண்டு போன்ற ஆசிய நகரங்களில் மட்டுமல்ல நியூயோர்க், ஜெனிவா போன்ற சருவதேச நகரங்களிலும் தனது இருப்பைப் பூரணமாக நிலைநிறுத்தி வருகின்றது. நாகா மக்களின் விடிவு தொடர்பாக ஐ. நாவின் பூர்வீக மக்களின் பாதுகாப்பு அமைப்போடு **NSCN (IM)** நெருங்கிய தொடர்பைக்கொண்டிருக்கின்றது. இதன் செயலாளரான முவியா **(Muivah)** அண்மையில் ஜெனிவாவில் வைத்துக் கொடுத்த செவ்வியொன்று மிக்கபரபரப்பாக இன்று பேசப்படுகின்றது. இந்திய அரசு தொடர்ந்து விடுக்கும் பேச்சுவார்த்தைக்கான கோரிக்கைகளை போலியானவை என்று நிராகரித்ததோடு, **இந்திய இராணுவத்தைத் தாம் இனிமேல்** தொடர்ந்து, கடுமையாக எதிர்கொள்ளப்போவதாகக் கூறியிருந்தார். இதன்பொருள், ஏற்கனவே மீளாத சிக்கலில் காஸ்மீர், பஞ்சாப்பில் சிக்கியிருக்கும் **இந்திய இராணுவம் மேலும் பல சிக்கல்களைச் சந்திக்கப்போகின்றது என்பதே.** அத்தோடு ஒய்வு ஒழிச்சல் என்பது இந்திய இராணுவத்திற்கு இனி எட்டாத சங்கதியாகப்போகின்றது என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். முவியா கூறியதுபோலவே அண்மைக்காலத்தில் மணிப்பூர்ப் பகுதியில், நாகா விடுதலை அமைப்பின் தாக்குதல்கள் தீவிரமாகியதோடு, 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுவிட்டனர்.

### தனிநாடுகோரும் போடோ பாதுகாப்பு அணி

இவற்றினைவிட, இன்னொரு மிகத்தொல்லைவாய்ந்த நிலையொன்றினை இந்தியா சந்திக்கப்போகின்றது. நாகா விடுதலை அமைப்பானது இப்போது திரிபுரா, அசாம், மேகாலயாப் பகுதி விடுதலை அமைப்புக்களோடும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திவிட்டது. இவற்றுள் முக்கியமானது, அசாமின் மேற்குப் பகுதியில் ‘போடோலாந்து’ எனத் தனிநாடுகோரும் போடோ இனமக்களின் உறுதிமிக்க அமைப்பான ‘போடோ பாதுகாப்பு அணி’யோடு **(BDSF Bodo Security Force)** மிகநெருங்கிய தொடர்பினை இவர்கள் ஏற்படுத்தியமைதான். இங்குள்ள முக்கியம் என்னவென்றால், மேற்குவங்கத்தையும் அசாமையும் இணைக்கும் 50 கிலோ மீற்றர் அகலமான சிறிய கோழிக்குஞ்சின் கழுத்துப்போன்ற பகுதி போடோ மக்களின் பிரதானதளமாக விளங்குகின்றது. அத்தோடு, இதன் வடக்கில் பூட்டான் எல்லையோரமாக இவர்கள் முகாம்கள் அமைத்து தம்மை பலப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. **இப்பகுதியே வட கிழக்கு மாநிலங்களை இந்தியாவோடு இணைக்கும் நிலப்பகுதி ஆகும்.** பிரதான நெடுஞ்சாலைகள், புகையிரப்பாதைகள் இதற்கூடாகவே செல்வதால், இந்திய அரசினையே பணயம் வைக்கத்தக்க நிலையை, நாகா அமைப்பு விரைவில் அடையும் நிலை தோன்றுகின்றது. இத்தோடு மேற்கு வங்கத்தின் இவ்வடக்குப் பகுதியிலேயே இந்திய அரசிற்கு 1980 இல் பெருத்த தலைவலியைக்கொடுத்த டார்ஜிலிங் **(Darjeeling)** மலைப்பகுதி உள்ளது. இங்குள்ள கூர்க்கா இன மக்கள் சுபாஸ் கெய்சிங் தலைமையில்தான் சில

**தமிழீழத்திலிருந்து பாலகுமாரன்**

காலத்திற்கு முன்னர், தனிமாநிலம் கோரி, ‘கூர்க்கா தேசிய விடுதலை’ முன்னணி **(GWLF)** எனப்போராடியவர்கள், இப்போது டார்ஜிலிங் பகுதிக்கு சுயாட்சிச் சபையொன்றைப்பெற்று -மிக்க மனக்குறைவோடு வாழ்பவர்கள். எனவே, கூட்டிக் கழித்து எப்படிப் பார்த்தாலும் இப்பகுதியில், நாகா விடுதலை அமைப்பு வேருன்ற முயல்வது, இந்தியாவிற்கும் வடகிழக்கு மாநிலங்களுக்குமான தரைவழித் தொடர்பை விரைவில், அபாயத்திற்குள்ளாக்கப்போகின்றது என்பதுதான்.

### பாரியசிக்கலில் தவிக்கும் இந்திய அரசு

இத்தகைய நிலையிலே என்ன செய்வது என்று புரியாமல், இரண்டும்கெட்டான் நிலையில் இன்று இந்திய அரசு இருக்கின்றது. முற்றிலுமான அன்னியப்பட்ட பகைமை நிரம்பிய மக்களைக்கொண்ட இப்பகுதியை எவ்வாறு நிருவகிப்பது என்பதே பாரிய சிக்கல். ஏனென்றால், எவ்வித உட்கட்டுமான அமைப்புக்களும் அந்த மாநில அரசிற்கு எவ்வித வருமானமும் வழங்காத நிலையில் உள்ள இம்மாநிலங்களை ஆள்வதற்கு, ஒருசிலரைத் தேடிப்பிடித்து இனக்குழு வேறுபாடுகளைப் பயன்படுத்தி பாரிய அளவில் நிதியுதவி செய்து இராணுவத்தை பெயரளவிற்கு நிறுத்தி, தன்பிடியை இப்பகுதிகளில் தக்கவைக்க எடுத்த முயற்சிகள் எவ்வித பயனையும் தரவில்லை. இங்குள்ள வியப்பு என்னவென்றால், ஆட்சியிலிருப்போரே போராளி இயக்கங்களோடு மறைமுக தொடர்புகளை கொண்டவராக அவர்கள் ஆணைகட்கு கட்டுப்பட்டவராக இருக்கின்றமைதான். நாகலாந்திலோ மாற்று அரசையே போராளிகள் நடாத்தி வருகின்றனர். **இவர்களது ஆணைக்கே உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோரும்** கட்டுப்பட்டு நடக்கின்றனர். பாரிய அரசின் ஊழியர்கள் அனைவரும் தமது மாத **வேதனத்தில் 25 -35 விழுக்காடுவரை விடுதலை வரியாக NSCN** அமைப்பிற்கு வழங்க வேண்டும். இத்தொகை மாதா மாதம் கழிக்கப்பட்டு, அவ்வப்பகுதி துறையாலே இயக்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. இதுபோலவே அசாமின் தேயிலை பெருந்தோட்ட துறையாயினும்சரி அல்லது இப்பகுதிகளின் மிக்க பொருண்மிய வழமான நிலக்கரி, நிலநெய் அகழ்ந்தெடுக்கும் துறையாயினும் சரி, போராளிகளின் அனுமதியின்றி இயங்க முடியாதநிலை இன்றுள்ளது.

### போராளிகளுக்கு கூட்டாக உதவும் பாக்கித்தானும், பங்களாதேசமும்

இத்தகைய இக்கட்டான நிலையிலே இந்தியா, மியான்மார், நாகா அமைப்புக்கட்கு செய்யும் உதவிகளை தடுக்க முற்படுகின்றது. குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களின் மேற்குப் பகுதி பங்களாதேச எல்லையாக இருப்பதால், இங்கு பாக்கித்தானும் பங்களாதேசமும் கூட்டாக போராளி அமைப்புகட்கு உதவுவதை எவ்வகையிலும் இந்தியாவால் தடுக்க முடியாது. எனவே மற்ற கிழக்கெல்லையில் மியான்மாரின் உதவிகளை நிறுத்த இந்தியா முயல்கின்றது. இதற்காக இதுவரை காலமும் மியான்மாரை அதன் மனித உரிமை மீறல்களுக்காகக் கடுமையாகக் கண்டித்த இந்தியா, இப்போது பெருத்த குத்துக் கரணம் அடித்துள்ளது. **மியான்மாரோடு நல்லுறவைப் பேணுவதற்காக இதுவரை காலமும் மியான்மாரின் சனநாயக ஆதரவு மாணவர் அமைப்பின் உறுப்பினர்களுக்குத் தான் அளித்து வந்த அடைக்கல உதவிகளை இப்போது இந்தியா நிறுத்திவிட்டது.** சிறையில் வாடும் சூகி அம்மையாரைப் பற்றி இப்போது பேச்செடுக்காமல், மியான்மாரோடு நெருங்கிய உறவைப் பேண முயல்கின்றது. எனினும் இம் முயற்சிகள் ஏதும் பயன் அளிக்கப் போவதில்லையென்றே கருதப்படுகின்றது.

எனவே இப்போது தோன்றும் கேள்வி என்னவென்றால், எப்போது இம்மக்களை வரலாறு விடுவிக்கப்போகின்றது என்பது தான். உள்ளே கனன்று குமுறும் எரிமலை என்றோ ஒரு நாள் வெடித்துத்தான் தீர வேண்டும். எனவே இந்தியாவின் செயற்கையான தேசியப் போர்வை கிழியும் நாளையும், வரலாறு அதன் போக்கில் நிச்சயம் தீர்மானிக்கும். அதுவரை இம்மக்களின் விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ■

## ஊனமுற்ற படையினருக்கு பேருந்துகளில் தனியிடம்

மதகுருமார் மற்றும் பெண்களுக்கென பேருந்துகளில் தனியிடம் ஒதுக்கப்படுவதைப்போல, ஊனமுற்ற படையினருக்கும் தனியிடம் ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்க, இருப்பதாகப் போக்குவரத்து அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், பேருந்து சேவையில் சுமார் 4500 ஊழியர்கள் தேவையில்லாமல் சம்பளம் பெறுவதாகவும், குறிப்பிட்டார். ■

# வெளிநாட்டில் வாழும் தமிழீழ மக்களாலும் தமிழீழ தேசியம் பாதுகாக்கப்பட வேண்டும்

**"தமிழீழத்திற்கு வெளியே வாழும் தமிழீழ மக்கள் தாம்படித்த பாடசாலைகள் ரீதியாகவும், தாம் வாழ்ந்த பிரதேசரீதியாகவும், தாம் பின்பற்றும் சமயரீதியாகவும், தாம்செய்யும் தொழில்ரீதியாகவும், தாம் அங்கம்வகித்த சனசமூக நிலையங்கள் ரீதியாகவும் சங்கங்கள் அமைத்து செயற்பட்டு வருவது, அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றது. 'உதவிசெய்யவேண்டும்' என்ற நோக்குடன் செயற்படுவது வரவேற்கப்படவேண்டியது ஒன்றுதான். ஆனால், இச்செயற்பாடுகள் தமிழினத்தின் ஒற்றுமைக்குத் தடையாக நிற்கும் சாதி, சமய, பிரதேச, தொழில் வேறுபாடுகளுக்குத் தூபமிடக்கூடிய வகையில், அமைவது விரும்பத்தக்கதல்ல. இவ்வாறு பிரிந்துநின்று செயற்படுதல், எம்மினத்தின் பாதுகாப்பிற்கும், தேசிய பலத்திற்கும் தடையாகவே அமையும். இதைவிடுத்து, தமிழீழ மண்ணில் உருவாக்கப்பட்டு, கொடூரமான இனவழிப்பின் மத்தியிலும், குறைந்த வசதிகளுடன் மனம் நிறைந்த சேவைகளை ஆற்றிவரும். தமிழீழ நிர்வாக அமைப்புக்களை (கல்வித்துறை, தொழிற்றுறை, காவற்றுறை, சட்டத்துறை, நீதித்துறை, வைப்பகத்துறை (வங்கித்துறை), நிர்வாகத்துறை) இனம்கண்டு அவற்றைப் பலப்படுத்தக்கூடிய வகையில், ஓர் அணியில் நின்று அணிதிரண்டு செயற்பட்டால் மட்டுமே தமிழீழத் தேசியம் பாதுகாக்கப்படும்".** ■

வெளிநாடுகளுக்கு அகதிகளாகவந்து வாழும் தமிழ் மக்கள் குறிப்பாகத் தமிழீழ மக்கள், தமிழீழ மண்ணில் இடம்பெயர்ந்து வாழும் தத்தம் ஊர் மக்களுக்கும், தாம்தாம் படித்த பாடசாலைகளுக்கும் உதவிசெய்யவேண்டும் என்ற நோக்கில், சங்கங்கள் அமைத்து செயற்பட்டுவருவது அண்மைக் காலங்களில் அதிகரித்துவருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உதவி செய்யவேண்டும் என்ற நோக்குடன் செயற்படுவது வரவேற்கப்படவேண்டிய ஒன்று; இதற்கு மறுப்பேதும் இருக்கமுடியாது.

ஆனால், தமிழீழ மண்ணில் சாதி, சமய, பிரதேச வேறுபாடு இன்றி சகலரும் சரிசமமாக வாழவும், இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்வோரின் தேவைகளைக் கவனித்து, இடம்பெயர்ந்து வாழும் இடங்களிலேயே அவர்கள் சுய தொழில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளும் வழிமுறைகளை உருவாக்கிக் கொடுத்துக்கொண்டு, ஒரு புனர்வாழ்வு சார்ந்த அமைப்பும், தமிழீழ மண்ணில்வாழும் தமிழ் இளம் சமூகத்தின் கல்வித் தேவைகளைக் கவனித்து, தமிழீழ தேசத்திற்குரிய கல்விமுறையை உருவாக்கி, இக்கல்விமுறை பிரதேச வேறுபாடு இன்றி, ஊர் வேறுபாடு இன்றி சகல இடங்களிலும் உரியமுறையில் கிடைக்கச்செய்யும் செயற்திட்டங்களில் இன்னொரு அமைப்பாகக் 'கல்வி சார்ந்த அமைப்பும்' பாரிய கஸ்டங்களுடன் செயற்பட்டுவருவதனை நாம் அனைவரும் அறியக்கூடியமுறையில் தமிழீழம் சார்ந்த செய்தித்தாட்களும், ஒளியிழைநாடாக்களும் செய்திகளை வெளியிட்டுவருகின்றன. மேற்குறிப்பிட்ட இரண்டு அமைப்புக்களும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களால் பலப்படுத்தப்பட்டால், தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழீழத்தில் உள்ள பாடசாலைகளில் சீரான கல்வியை வழங்க முடிவதுடன், விடிவுபெறும் தமிழீழமும், உறுதியான புனர்வாழ்வு அமைப்பையும், கல்வித்துறையையும்கொண்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேற்குறிப்பிட்ட நிலைமைகளைக் கருத்திற்கொள்ளாது சாதி, சமய, பிரதேச ரீதியாக நாம் முன்னைய காலங்களில் எமது சொந்தமண்ணில் பிரிந்து நின்று வாழ்ந்து வந்ததினால், எமக்கும் எமது இனத்துக்கும், எமது மண்ணுக்கும் ஏற்பட்ட அவலநிலைகளை மறந்துவிட்டோம். ஊர் ரீதியாகவும், பாடசாலைகளின் பெயர் ரீதியாகவும் சங்கம் அமைத்து செயற்பட்டு வருவது ஒருவிடயம். ஆனால், அவை பொதுநோக்கில் சிந்திக்கத் தவறினால், நீண்டகால நோக்கில் பயன்பெறப்போவது சிங்கள இனவாதமும் சிறீலங்கா அரசுமேயாகும் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

அனுராதபுரத்தைத் தளமாக கொண்ட புக்காரா விமானங்கள், அங்கிருந்து பலாலி இறங்கு தளத்திற்குப் பறந்துவர 20 நிமிடங்கள் பிடிக்கின்றன. அதேபோல கட்டுநாயக்காவைத் தளமாகக் கொண்ட சுப்பர்சொனிக் என்றழைக்கப்படும் எஃவ் -7 சண்டைவிமானங்கள் அங்கிருந்து யாழ்ப்பாண வான் பரப்பில் நுழைய, 10 நிமிடங்கள் மட்டுமே எடுக்கின்றன. எனவே அனுராதபுரத்திலிருந்தும் -கட்டுநாயக்காவிலிருந்தும் பறந்து வந்து, தேவையானால் பலாலி இறங்கு தளத்தைத் தற்காலிக இருப்பிடமாகக் கொண்டு ஒரு திடீர்த் தாக்குதல் நடவடிக்கையில் பங்குகொண்டுவிட்டு, மீண்டும் அந்தந்தத் தளங்களுக்கே சென்று விடுவது வான்படைக்குக் கடினமில்லாத ஒன்றாக இருக்கின்றது.


புக்காரா குண்டுவீச்சு விமானங்கள், எஃவ் -7, சுப்பர்சொனிக் விமானங்கள், எம். ஐ. 8 உலங்கு வானூர்திகள் என்பவற்றை சிங்கள அரசு கொள்வனவுசெய்தபின், வான்படையின் சண்டையிடும் ஆற்றல் பெருகியுள்ளதாக, வான்படைத் தளபதிகள் கூறுகின்றனர். இதில் பிர

**அனுராதபுரத்தைத் தளமாகக்கொண்ட புக்காரா விமானங்கள் அங்கிருந்து பலாலி இறங்குதளத்திற்குப் பறந்துவர 20 நிமிடங்கள் பிடிக்கின்றன. அதேபோல கட்டுநாயக்காவைத் தளமாகக்கொண்ட சுப்பர்சொனிக் என்றழைக்கப்படும் எவ் - 7 சண்டை விமானங்கள் அங்கிருந்து யாழ்ப்பாண வான்பரப்பில் நுழைய, 10 நிமிடங்கள் மட்டுமே எடுக்கின்றன.**

தானமாக புக்காரா குண்டுவீச்சு விமானம், புலிகளுக்கு எதிரான போரில் வான்படைக்கு நன்கு உதவுவதாக அதன் தளபதிகள் பெருமைப்படுகின்றனர். அதற்கு அவர்கள் சில காரணங்களைக் கூறுகின்றனர். சியாமாசெட்டி குண்டுவீச்சு விமானத்தைவிட ஆறு மடங்கு குண்டுகளைச் சுமந்துசென்று இலக்குகள்மீது போடவல்ல சக்தி புக்காராவுக்கு உண்டென்பது, அதில் ஒன்று.

சியாமாசெட்டி விமானமானது, 125 கி. கி. நிறையுடைய இரண்டு குண்டுகளை அல்லது 50 கி. கி. நிறையுள்ள ஆறு குண்டுகளை மட்டுமே ஒரு பறப்பின்போது சுமந்துசெல்ல வல்லது.

ஆனால், புக்காரா விமானமானது, ஒரு பறப்பின்போது 125 கி. கி. எடையுள்ள 12 குண்டுகளை அல்லது 500 கி. கி. எடையுள்ள 3 குண்டுகளைச் சுமந்து சென்று போடவல்லது. அத்துடன், புக்காராவின் இரண்டு சிறகுகளிலும் பொருத்தப்பட்டுள்ள இரண்டு பீரங்கிகள் புக்காராவுக்கு மேலும் பலம் கொடுக்கின்றன என்று, வான்படைத் தளபதிகள் பெருமைகொள்கின்றனர்.



சுப்பர்சொனிக்: (F 7) மணிக்கு 2, 178 கி. மீ. வேகம். 1, 500 கி. கி. நிறையுடைய குண்டுகளைச் சுமந்துசெல்லும்.


**தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...**

# சிறீலங்கா வான்படையின்...

## சிங்கள வான்படையின் சாதனை

ஆனால், உண்மை வேறுவிதமாகத்தான் உள்ளது. சிங்களத் தளபதிகள் பெருமையாகச் சொல்லும் இத்தகைய நவீன வான்கலங்களை சிங்கள அரசு வாங்கிய பின், இவற்றைப் பயன்படுத்தி சிங்கள வான்படை எதைச் சாதித்தது? எந்தப் போர்முனையை வெல்ல உதவியது அல்லது எத்தகைய பின்னடைவை இது புலிகள் இயக்கத்திற்கு ஏற்படுத்தியது என்று கேட்டால், குடிமனைகளை அழித்து, மக்களைக் கொன்றதைத் தவிர. போர்க்களத்தில் இவை பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்று துணிந்து கூறலாம்.

சுப்ப சொனிக் என்றழைக்கப்படும் எஃவ் -7 சண்டை விமானத்தைப் பொறுத்தவரை, அதை வான்படையின் ஒரு



அவ்ரோ: (HS - 748 - UK) மணிக்கு 320 கி. மீ. வேகம்.

ஊதாரிப் பிள்ளை என்றே அழைக்கலாம். ஏனெனில் பெரும் செலவுடன் இயக்கப்படும் ஒரு விமானம் என்பதுடன், விடுதலைப் போராட்டங்களுக்கெதிராக இவ் விமானத்தைச் சரியாகப் பயன்படுத்த முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

> ஒரு புக்காரா விமானத்தைக் கொள்வனவுசெய்ய 121 கோடிரூபா செலவாகின்றது. ஒரு வை - 8 போக்குவரத்து விமானத்தை வாங்க, சமார் 50 கோடிரூபா செலவாகின்றது. எம் . ஐ. - 8 ரக உலங்குவானூர்தி ஒன்றை 25 கோடிரூபா கொடுத்து வாங்குகின்றது.

உண்மையில் சுப்ப சொனிக் கொள்வனவிற்கும் எமது போர்க்களத்திற்கும் சம்பந்தமில்லை. இந்திய விமானங்கள் சிறீலங்காவின் வான் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கென்ற நோக்கத்துடனேயே, சீனாவிலிருந்து இந்தவகை விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால், இந்த எஃவ் -7 ஐ விட வேகமும், ஆற்றலும் கொண்ட மிராஜ் 2000 மற்றும் மிக் -29 போன்ற சண்டை விமானங்களை இந்திய வான்படை வைத்திருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

இருந்தபொழுதிலும் இந்த சுப்ப சொனிக்கைப் பயன்படுத்தி தமிழீழ மக்கள் மீது ஒரு உளவியல் போரைச் சிங்கள வான்படை தொடுத்து வருகின்றது. திகிலையூட்டும் அதன் பேரிரைச்சலும் சத்தத்தை வைத்துக் கண்டுபிடிப்பதில் இருக்கும் கடினமான தன்மையும் மக்களிடையே அவ்விமானம் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது மறக்க முடியாது. அத்துடன் கட்டாயம் குடிமனைமீதுதான் குண்டுவிழும் என்றொரு பயமும் சுப்ப சொனிக்கைக் கண்டதும் மக்களுக்கு ஏற்பட்டு விடுகின்றது.

ஆயினும், எமது வான் பரப்பிற்குள் இவை வந்துவிட்டன என்ற சேதியை அறிவிக்கும் விமான இரைச்சல் கேட்டவுடனேயே -அது புக்காராவோ அல்லது சுப்ப சொனிக்கோ -பதுங்குகுழிக்குள் போய்விடுவது மக்களிற்கிருக்கும் ஒரு பாதுகாப்பான தற்காப்புவழியாகும். புலிவீரர்களைப் பொறுத்தவரை சமர்க்களங்களில் நகரும்போதும் தங்கிநிற்கும் போதும் உருமறைப்புக்களை பயன்படுத்துவதுடன், குவிந்து நிற்பதைத் தவிர்ப்பது இழப்புகளை இல்லாது செய்ய அல்லது குறைக்க சிறந்தவழியாகும்.

அதேவேளை, விமானங்கள் குத்திப்பதிந்து தாக்குதல்களை நடாத்தவரும் போது, அதன் மூக்குநுனியை நோக்கி -பதற்றமில்லாது, இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளவேண்டும். ஏனெனில், இவ்விதம் குத்திப்பதிந்து தாக்கவரும்போது விமானங்களின் முன்பாகம் -அது சுப்ப சொனிக்காக இருந்தாலும் -முட்டைக் கோதைப்போல மிக மென்மையாக பாதுகாப்பற்று இருக்கின்றது. அதனூடாக ஒரு சில ஏ. கே. ரவைகள் உட்சென்றுவிட்டாலேயே விமானத்தை வீழ்த்த அவை போதுமானவையாகிவிடும்; அல்லது அப்படியான துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு ஈடுகொடுக்கப் பயப்படும் விமானிகள், தாழப்பறந்து குண்டு வீசுவதைக் கை விட்டு, உயரத்திற்கே சென்று, இலக்கின்றிக் குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பிவிடுவர்.

> கடற்பலத்தைப் பயன்படுத்தி, தமிழீழத்தில் தனது படை முகாம்களைப் பயமின்றிப் பேணலாம் என்ற சிங்கள அரசின் நம்பிக்கைக்குக் கடற்புலிகள் குறுக்கே நின்றபோது, வான்பலத்தை அதிகம் நம்பவேண்டிய நிலைக்குச் சிங்கள அரசு வந்ததில் வியப்பேதுமில்லை.

## சிங்கள வான்படைக்கு பக்கபலமாகவுள்ள நாடுகள்

சிறீலங்கா வான்படைக்கு பக்கபலமாக இருந்து, சகலவிதமான பயிற்சிகளையும், போர் விமானங்களையும், அதற்குரிய ஆயுதங்களையும் வழங்கும் நாடுகளாக, சீனாவும் -பாகிஸ்தானும் முன்னணியில் உள்ளன. இதுதவிர ரஸ்யா, ஆர்ஜென்ரைனா, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்தும் சிங்கள வான்படை தனக்குத் தேவையானவற்றைப் பெற்று வருகின்றது.

1951 ஆம் ஆண்டு 106 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா வான்படை தொடக்கத்தில், 'றோயல் விமானப் படை' என்றே அழைக்கப்பட்டது. பிரிட்டனின் விமானப்படையான றோயல் விமானப்படையின் பெயரையே இங்கும் சூட்டியதுடன், பிரிட்டனின் அதிகாரிகளே இவ்வான்படையின் தளபதிகளாகவும் -உயரதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் 1965 ஆம் ஆண்டு இது சிங்களவர் மயப்படுத்தப் பட்டது. 1972 ஆம் ஆண்டு சிறீலங்கா குடியரசாக்கப்பட்டதை அடுத்து, 'சிறீலங்கா வான்படை' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. சிறீலங்கா வான்படை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1971 ஏப்ரல் மாதம் ஜே. வி. பி. இயக்கம் நடாத்திய கிளர்ச்சிக் காலகட்டம் நீங்கலாக, தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மை பெறத் தொடங்கிய 1983 ஆம் ஆண்டுக் காலகட்டம்வரை, சிறீலங்கா வான்படை உல்லாசப் பிரயாணிகளைக் காவித்திரியும் பணியுடன், வெள்ளப்பெருக்குகள் -விபத்துகள் ஏற்படும் வேளைகளில் மீட்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## பெரும் பணத்தை விழுங்கும் வான்படை

ஆயினும் 1984 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிங்கள வான்படையின் உலங்கு வானூர்திகள் போருக்குப் பயன்படுத்தப் படத் தொடங்கிவிட்டன. அத்துடன் 1986 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவ்ரோ விமானங்களும், சியாமாசெட்டி ரக குண்டுவீச்சு விமானங்களும் போரில் முக்கிய இடத்தையும் பிடித்துக்கொண்டன. அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள வான்படை தனது பலம் முழுவதையும் புலிகள் இயக்கத்துடன் போரிடுவதிலும் -மக்களைக் கொன்று அடிபணியச் செய்வதிலும் செலவிடத்தொடங்கியது. சிங்கள அரசு போருக்குச் செலவிடும் பணத்தில் கணிசமான பங்கை, வான்படைக்கான போர்க்கலன்களைக் கொள்வனவு செய்வதில் செலவிடுகின்றது.


**ஒரு புக்காரா விமானத்தைக் கொள்வனவு செய்ய 121 கோடி ரூபா செலவாகின்றது; ஒரு வை -8 போக்குவரத்து விமானத்தை வாங்க சுமார் 50 கோடி ரூபா செலவாகின்றது; எம். ஐ. 8 ரக உலங்கு வானூர்தி ஒன்றை 25 கோடி ரூபா கொடுத்து வாங்குகின்றது.**

சிங்கள வான்படையிடம் இருக்கும் வான்கலங்களின் எண்ணிக்கையை இந்த விலைப்பணத்துடன் சேர்த்துப் பெருக்கிப்பார்க்கும்போது, சிங்கள அரசு தனது வான்படைக்குச் செய்திருக்கும் செலவைக் கணிப்பிடமுடியும். வான்கலங்கள் மட்டுமல்ல வான்கலங்களிருந்து பயன்படுத்தப்படும் ரொக்கட்டுகளும், குண்டுகளும், பீரங்கிக் குண்டுகளும் கூட, பெரும் பணச் செலவுடன் கொள்வனவு செய்யப்படுபவைதான். பொருளாதாரரீதியாக பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், சிங்கள அரசானது வான்கலங்களை வாங்குவதை -நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதை -குறைக்கவில்லை; தொடர்ந்தும் அது தனது வான்பலத்தை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

சிங்கள அரசின் வான்பலத்தைச் செயலற்றதாக்குவதற்கு போர்த்திறனும் -ஈகமும் மட்டும் போதாது; நவீன வான் எதிர்ப்பு ஆயுதங்கள் புலிகள் இயக்கத்திடம் இருக்குமாக இருந்தால், பல கோடி ரூபா பெறுமானமுள்ள போர் விமானங்களை அடித்து வீழ்த்திச் சிங்கள வான்படையைப் பலமிழக்கச்செய்வதுடன், சிங்கள அரசையும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள முடியும்.

ஆனால், இந்த வான் எதிர்ப்பு ஆயுதங்களைக் கொள்வனவுசெய்யப் பெருந்தொகைப் பணம் வேண்டும். ஆகவே, சிங்கள அரசின் வான்பலத்தைச் சிதைப்பதென்பது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழுகின்ற எமது மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'



வை - 8: (Yunshuji - 8) மணிக்கு 550 கி. மீ. வேகம். போக்குவரத்துவிமானம். 300 கி. கி. எடையுடைய எட்டுக்குண்டுகளை எடுத்துச்செல்லும்.



வை - 12: (Yunshuji -12) மணிக்கு 292 கி. மீ. வேகம். போக்குவரத்துவிமானம்.

# தமிழீழ உட்கட்டுமானம்

## நீர் வழங்கலும் வடிகாலும்

## பகுதி II

இறுதிப் பகுதி

எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப் பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப் பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட் டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடி வமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள் ளன.

### 3. தமிழீழத்தின் தேர்ந்தெடுக் கப்பட்ட இருபது பட்டினங்க ளின் நன்னீர்த் தேவைகளும் சிபார்சுகளும்.

### 3.7 மாந்தை

மாந்தைப் பிரதேசம் மன்னாரையும், தலைமன்னார் தீவையும் உள்ளடக்கி உள்ளது. தற்போது மன்னார்ப் பகுதிக்கு நாளொன்றிற்கு 150,000 கலன் விநியோகிக்கக் கூடிய ஒரு நீர் விநியோகத் திட்டம் நிர்மாணிக்கப்பட் டுள்ளது. இது மேலும் விஸ்தரிக்கக்கூடிய நிலையில் தான் நிர்மாணிக்கப்பட்டது. தலைமன்னார் ஒரு முக்கிய பயணிகள் முனையாகப் பயன்படும் என்றபடியால், இங்கு அமைந்திருக்கும் பயணிகள் காரியாலயம், விடு திகள் போன்றவற்றிற்கு நாளாந்தம் சுமார் 20,000 கலன் நீர் தேவைப்படும். ஏற்கனவே இவ்விடத்தில் 5,000 கலன் நீர் வழங்கக்கூடிய திட்டம் இருக்கின்றது. ஆகவே, இத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட வேண் டும்.

மாந்தைப் பகுதிக்கு உயிலங்குளம் பிரதான நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நகரத்தின் குடிநீர்த் தேவை பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் விடுதிகளும் | 75 | 30,000 |
| 3. ஆதார வைத்தியசாலை | 1 | 50,000 |
| 4. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகங்களும் | 5 | 5,000 |
| 5. பாடசாலைகள் | 5 | 5,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 7. உணவகங்கள் | 10 | 10,000 |
| 8. உணவுவிடுதிகள் | 2 | 10,000 |
| 9. திரையரங்குகள் | 5 | 3,000 |
| 10. தொழிற்பேட்டைகள் | 10 | 10,000 |
| | | 133,000 |

நாளாந்தம் சுமார் 133,000 கலன் நீர் தேவை. முருங்க னில் மேலதிக குழாய்க் கிணறுகளை நிர்மாணித்து, இத்தேவையைப் பூர்த்திசெய்யலாம். தற்போது மன்னார் நகர் நீர்விநியோகத் திட்டப் பிரதான குழாய் உயிலங் குளம் ஊடாகச் செல்வதால், இத்திட்டத்தை விஸ்தரிப் பதன் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். உயி லங்குளம் நகர்ப்பகுதியில் சனத்தொகை 10,000 ஆக அதிகரிக்கலாம். முன்னர் நடாத்திய ஆய்வுகளின்படி, உயிலங்குளம் பகுதியிலும் நன்னீர் இருப்பதாக அறிய வருகின்றது. ஆகையால், உயிலங்குளத்தில், வாழும் நகர மக்கள் கைப்பம்பி பொருத்திய குழாய்க் கிணறுகள் மூலம் தாமே தமது தேவையைப் பூர்த்திசெய்யலாம்.

### 3.8 மடு

மடுப்பிரதேசத்தில் பிரதான நகரமாக மடுறோட் அமை யும். அபிவிருத்திகளின் பின், இந்நகரின் சனத்தொகை 10,000 ஆக அதிகரிக்கலாம். இப்பிரதேசத்தில் மடுக் கோவில் அமைந்திருப்பதால், உற்சவ காலங்களில், நீர்த்தேவை மிகவும் அதிகரித்துக் காணப்படும். ஆனால், இது ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே. சுமார் 100,000 மக்கள் விழாக்காலத்தில் கலந்து கொள் வார்களாயின் மக்களின் குடிநீர்த் தேவை நாளாந்தம் 200,000 கலன் என்று கணிப்பிடலாம்.

மடுறோட் நகரம் ஸ்தாபிக்கும்போது, குடிநீர்த்தேவை கள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் விடுதிகளும் | 30 | 10,000 |
| 3. வைத்தியசாலைகள் | 1 | 10,000 |
| 4. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகங்களும் | 3 | 3,000 |
| 5. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 6. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 7. உணவுச்சாலைகள் | 5 | 5,000 |
| 8. உணவுவிடுதிகள் | 1 | 5,000 |
| 9. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 10. தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |
| | | 53,000 |

நகரத்தில் வாழும் 10,000 மக்களுக்கு நாளாந்தம் 50,000 கலன் நீர் தேவை. ஆகவே, மொத்தமாக நாளாந்தம் 100,000 கலன் குடிநீர் தேவை. ஏற்கனவே அப்பகுதியில் குடிநீர் பெறுவது கடினம். தேசிய நீர்வழங்கல் சபை, முன்பு ஆரம்ப ஆய்வுகளை மேற்கொண்டது. எனினும், எவ்விதபயனும் அளிக்கவில்லை. குடிநீர் பெறுவதற்கு 300 அடிக்கு மேற்பட்ட ஆழமுள்ள குழாய்க் கிணறுகள் அமைக்கவேண்டிவரும் என்று மாத்திரம் தெரிவிக்கப்பட் டது. ஆகையால் இப்பகுதியில், விரிவான ஆய்வுகள் நடாத்தி, குடிநீர்பெற வழிகளைக் காணவேண்டும்.

மடுக்கோவிலுக்குத் தேவையான நீரைப்பெறுவதற்கு, கோவிலுக்கு அண்மையில் உள்ள குளத்தைப் புனர மைத்து, குளத்தில் ஆழ்ந்த குழாய்க்கிணறுகள் அமைத்து நீரைப்பெற்றுக்கொள்ளலாம்.

### 3.9 வவுனியா

தற்போதைய வவுனியா மாவட்டத்தில், ஒரு பாரிய நீர்விநியோகத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. மேலும் 230 குழாய்க்கிணறுகள் நிறுவப்பட்டு, கைப்பம்புகள் பூட்டப்பட்டு, கிராமப்புறங்களுக்குக் குடிநீர் வழங்கப்படு கின்றது. குழாய்க்கிணறு பராமரிப்பு இவ்விடத்தில், சரியாக மேற்கொள்ளாத போதிலும், ஓரளவிற்கு மக்க ளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. ஓமந்தை, வவுனியாப் பிரதேசத்திற்குப் பிரதான நகர மாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், நாளடைவில் ஓமந்தையும் வவுனியாவின் மட்டத்தை எட்டிவரும் பட்டணமாக எதிர்காலத்தில் அமையும். இவ்விடத்தில், விவசாயம் வளர்ச்சிபெற்ற தொழிலாக இருப்பதால், நிலக்கீழ்நீர் போதியளவு இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. இங்கு நீர் உவர்த்தன்மையற்று, நன்னீ ராகவே காணப்படுகின்றது. ஓமந்தைப் பட்டினம் ஸ்தா பித்தபின், பின்வரும் குடிநீர்த்தேவைகள் உண்டாகும்.

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் விடுதிகளும் | 50 | 25,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 20,000 |
| 4. தனியார் வைத்தியசாலையும் மருந்தகமும் | 5 | 5,000 |
| 5. கடைகள் | 100 | 10,000 |
| 6. உணவுச்சாலைகள் | 5 | 5,000 |
| 7. விடுதிகள் | 1 | 5,000 |
| 8. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 9. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 10. கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |
| | | 85,000 |

ஓமந்தை நகரில் வாழும் மக்களின் தொகை 10,000 ஆகக்கொள்ளும்போது, அவர்களின் குடிநீர்த்தேவை நாளொன்றுக்கு 50,000 கலன் ஆகும். ஆகவே, நகரின் முழுத்தேவை நாளாந்தம் ஏறக்குறைய 150,000 கலனா கும். இந்நீரைக் குழாய்க்கிணறுகள் மூலம் பெற்றுக்கொள் ளலாம்.

### 3.10 குச்சவெளி

இப்பிரதேசம் திருகோணமலைக்கு அடுத்துக் காணப்ப டுகின்றது. இப்பகுதிக்கு திரியாய் நகரமாகத் தேர்ந்தெ டுக்கப்பட்டிருக்கின்றது. இந்நகரம் கடலுக்கு அண்மை யில் இருப்பதால், நிலக்கீழ் நீர் உவர்த்தன்மை உடை யதாகவே இருக்கும். மேலும் இக்கிணறுகளில் உள்ள நீரில், அதிகளவு இரும்பு உலோகம் உள்ளதாக அறிய வருகின்றது. ஆகையினால், இங்கு நிலமேல் நீரையே குடிநீராகப் பாவிக்கவேண்டியுள்ளது. இந்நகரம் விருத் தியடைந்தவுடன், பின்வரும் தேவைகள் உண்டாகும்.

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் விடுதிகளும் | 50 | 5,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 20,000 |
| 4. தனியார் மருத்துவமனைகளும், மருந்தகமும் | 5 | 5,000 |
| 5. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 6. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 7. உணவுவிடுதிகள் | 5 | 5,000 |
| 8. விடுதிகள் | 2 | 10,000 |
| 9. திரையரங்குகள் | 8 | 2,000 |
| 10. கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |

மொத்தம் 65,000 கலன் எனக்கொள்ளலாம். மேலும், நகர்ப்பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையை 10,000 எனக்கொண்டால், இவர்களுக்கு நாளாந்தம் 50,000 கலன் நீர் தேவை. இவ்விடம் நிலக்கீழ் நீருக்கு சாத்தியம் இல்லை. அண்மையில், உள்ள குளங்களி லிருந்து நிலமேல் நீரை எடுத்து சுத்திகரித்து, குடிநீரா கப் பாவிக்கவேண்டும்.

### 3.11 திருகோணமலை

இந்நகரம் ஏற்கனவே விருத்தியடைந்திருக்கின்றது. பந்தி 2 இல் கூறியபடி, இங்கு ஒரு பாரிய நீர் விநி யோகத்திட்டம் செயற்படுகின்றது. இத்திட்டத்திற்கு 24 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கந்தளாய்க் குளத்திலி ருந்து நிலமேல் நீர் பெறப்பட்டு, முழு அளவில் சுத்திக ரித்து விநியோகிக்கப்படுகின்றது. இது இனிவரும் 20 வருடங்களுக்குப் போதுமானதாகவே இருக்கும். மேலும் தேவை ஏற்பட்டால், ஒருசில மாற்றங்களோடு இதை மேலும் விஸ்தரிக்கலாம்.

### 3.12 மூதூர்

தற்போது மூதூர் மாவட்டத்தில், ஒருசிறு நீர் விநியோ கத்திட்டம் இருக்கின்றது. ஆகக்கூடியதாக நாளாந்தம் 10,000 கலன் நீரே விநியோகிக்கலாம். இப்பிரதேசம் கடற்கரையில் இருப்பதால், நிலக்கீழ் நீர் உப்புத்தன்மை கூடியதாகவே இருக்கின்றது. இப்பிரதேசம் மணற்பாங் காய் இருப்பதனால், ஓரளவு நிலக்கீழ் நீர் காணப்படு கின்றது. இவ்விடத்தில் குழாய்கள் மூலம் ஒன்றோ டொன்று இணைக்கப்பட்ட, ஒரு கூட்டமான கிணறு களை அமைத்து, தேவையான நீரை ஓரளவுபெற்றுக் கொள்ளலாம். வேகம் குறைந்த நீர் இறைக்கும் இயந் திரங்களைப் பொருத்தினால், உப்புத்தன்மை அதிகரிக் காமல் பாதுகாக்கலாம். கிளிவெட்டி நகரத்தின் நீர்த் தேவைகள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேச அலுவலகம் | 1 | 5,000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 50 | 25,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 25,000 |
| 4. மருத்துவமனைகளும் மருந்தகங்களும் | 5 | 5,000 |
| 5. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 6. உணவுச்சாலைகள் | 5 | 5,000 |
| 7. விடுதிகள் | 1 | 5,000 |
| 8. பாடசாலைகள் | 5 | 5,000 |
| 9. திரையரங்குகள் | 3 | 3,000 |
| 10. கைத்தொழிற்பேட்டைகள் | 10 | 10,000 |

நாளாந்தம் 95,000 கலன் எனக்கொள்ளலாம். இந்த நகரத்தில் உள்ள மக்களின் தொகை 10,000 ஆக அதிக ரித்தால், நாளொன்றிற்கு 50,000 கலன் நீர் தேவை. ஆகவே, நகரத்தின் முழுத்தேவை 145,000 கலன் ஆகும்.

ஆய்வுகளின்பின், நிலக்கீழ் நீர் எடுக்காமுடியாவிட் டால், அண்மையில் உள்ள அல்லை என்னும் குளத்தி லிருந்து நிலமேல் நீரை எடுத்துச் சுத்திகரித்து விநி யோகிக்கலாம்.

### 3.13 வாகரை

இப்பிரதேசம் கடற்கரை ஓரத்தில் இருக்கின்றது. இத னால், இங்கு நீரின் உப்புத்தன்மை கூடியதாகக் காணப் படுகின்றது. இப்பிரதேசத்திற்கு மாங்கனி பட்டினமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இப்பட்டினம் கடலுக்கு மிகமிக அண்மையில் இருப்பதனால், எந்தவிதமான நீர்விநியோகத் திட்டமும் மேற்கொள்ளமுடியாது. எனி னும், இப்பிரதேசத்தில் இருக்கின்ற குளங்கள் அல்லது வாய்க்கால்களைப் புனரமைத்து, நிலமேல் நீரைப்பெற வேண்டும். இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவே ண்டும்.

மாங்கனி நகரின் நீர்த்தேவைகள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் |
|---|---|---|
| 1. பிரதேச அலுவலகம் | 1 | 3,000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 30 | 5,000 |
| 3. அரசினர் வைத்தியசாலை | 1 | 10,000 |
| 4. மருத்துவ விடுதிகளும் மருந்தகங்களும் | 3 | 3,000 |
| 5. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 6. உணவுச்சாலைகள் | 3 | 3,000 |
| 7. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 8. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 9. கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# தமிழீழ உட்கட்டுமானம்...

இந்நகரின் சனத்தொகை 5,000 என அதிகரித்தால், அவர்களுக்கு நாளாந்தம் 25,000 கலன் குடிநீர் தேவை.

ஆகவே, மொத்தம் 65,000 கலன் நீர் நாளாந்தம் தேவை. முன்பு கூறியதுபோல் ஆய்வுகள் நடாத்தி, நிலமேல் நீரைப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 3.14 வெல்லாவெளி

இப்பிரதேசத்தில், பேராற்றில் இருந்து ஒரு சிறிய நீர் விநியோகத்திட்டம் இருக்கின்றது. ஆற்றங்கரையோரம் அமைக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து நீர்பெறப்படுகின்றது. பொதுவாக இப்பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் இரும்பு உலோகம் போன்ற இரசாயன மாசுக்கள் காணப்படுகின்றன. பேராறு இப்பிரதேசத்தின் பட்டினமாக இருக்கும். இப்பிரதேசத்தின் குடிநீர்த்தேவை பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 3,000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 30 | 15,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 10,000 |
| 4. மருத்துவவிடுதிகளும் மருந்தகங்களும் | 3 | 3,000 |
| 5. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 6. உணவுச் சாலைகள் | 3 | 3,000 |
| 7. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 8. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 9. கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |

நாளாந்தம் 50,000 கலன்நீர் தேவை. இப்பட்டினத்தின் சனத்தொகை 5,000 என அதிகரிக்கும்போது, நகரத்தின் தேவை நாளாந்தம் 25,000 கலன் ஆகும். ஆகவே, மொத்தம் 75,000 கலன் நீர் நாளாந்தம் தேவை. மேற்குறிப்பிட்ட நீரை பேராறு ஆற்றங்கரை ஓரத்தில் மேலதிக கிணறுகளை அமைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

## 3.15. மட்டக்களப்பு

இப்பிரதேசம் கிழக்கு மாகாணத்தின் நிர்வாக மையமாக அமையும். இங்கு அபிவிருத்திக்குப் பின்னர், அதிகமான அரசாங்க அலுவலகங்கள், விடுதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வியாபார நிலையங்கள் முதலியவற்றையே காணக்கூடியதாக இருக்கும். தற்போதைய மட்டக்களப்பு நகரம், நாளாந்தம் 250,000 கலனை கல்லடியில் உள்ள கிணறுகளில் இருந்து நிலக்கீழ் நீராகப் பெறுகின்றது. மட்டக்களப்பு நகரத்தின் புதிய நகரம் கரடியன் ஆற்றில் அமைக்கப்படும். இதன் குடிநீர்த் தேவைகள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. செயலகம் | | 10,000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 100 | 50,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 30,000 |
| 4. தனியார் வைத்திய நிலையங்களும் மருந்தகங்களும் | 5 | 5,000 |
| 5. பாடசாலைகள் | 5 | 5,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 100 | 10,000 |
| 7. உணவுவிடுதிகள் | 2 | 10,000 |
| 8. உணவகம் | 5 | 5,000 |
| 9. திரையரங்குகள் | 5 | 3,000 |
| 10. தொழிற்பேட்டைகள் | 10 | 10,000 |
| | | 138,000 |

சுமார் நாளாந்தம் 140,000 கலன் நீர் எனக்கொள்ளலாம். கரடியன் ஆறு புதிய நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஏற்கனவே மட்டக்களப்பு நகரம் விருத்தியடைந்திருப்பதால், சாதாரண மக்கள் பழைய மட்டக்களப்பு நகரத்திலேயே இருக்க விரும்புவார்கள். கல்லடியில் போதிய நிலக்கீழ் நீர் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆகையால் மேற்கூறிய தேவையை கல்லடியில் இருந்துபெற்றுக்கொள்ளலாம்.

## 3.16 அக்கரைப்பற்று

இப்பிரதேசத்தின் பட்டினமாக பாலாமுனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது கரையோரப் பகுதியில் காணப்படுகின்றது. இப்பிரதேசம் மணற்பாங்காகவே இருக்கின்றது. இங்கு கிணறுகளில் உள்ள நீரில் உவர்த்தன்மை கூடியதாகக் காணப்படுகின்றது. பாலாமுனை நகரத்தின் குடிநீர்த்தேவைகள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 3.000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 30 | 15.000 |
| 3. வைத்தியசாலை | 1 | 10.000 |
| 4. மருத்துவமனைகளும் மருந்தகங்களும் | 3 | 3.000 |
| 5. பாடசாலைகள் | 3 | 3.000 |
| 6. வியாபார நிலையங்கள் | 50 | 5.000 |
| 7. உணவகம் | 3 | 3.000 |
| 8. திரையரங்குகள் | 3 | 3.000 |
| 9. தொழிற்பேட்டைகள் | 5 | 5.000 |
| | | 50.000 |

நாளாந்தம் சுமார் 50,000 கலன்நீர் எனக்கொள்ளலாம். நகரவாழ் மக்களின் எண்ணிக்கை 10,000 எனக்கொண்டால், அவர்களுக்கு நாளாந்தம் 50,000 கலன் நீர் தேவை. ஆகவே அவர்களுக்கு மொத்தம் 100,000 கலன் நீர் நாளாந்தம் தேவை. இவ்விடத்தில் ஆய்வுகள் மேற்கொண்டு, நிலக்கீழ் நீரைப்பெற வழிவகைகள் செய்யவேண்டும்.

## 17. பொத்துவில்

தற்போதைய பொத்துவில் நகரம் விருத்திசெய்யப்படும். இப்பிரதேசம் மணற்பாங்காகவே காணப்படுகின்றது. சாதாரணமாக இவ்விடத்திலுள்ள நீர் உப்புத்தன்மையும் இரும்பும் கூடுதலாகக் காணப்படுகின்றது. தற்போது எந்தவிதமான நீர்விநியோகத்திட்டமும் இல்லை. இதற்கான ஆய்வுகள் நடாத்தப்படவேண்டும். இந்த நகரத்தின் தேவைகள் பின்வருமாறு:

| | எண்ணிக்கை | தேவையான நீர் நாளாந்தம் / கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 3,000 |
| 2. ஏனைய அலுவலகங்களும் விடுதிகளும் | 30 | 14,000 |
| 3. வைத்தியசாலைகள் | 1 | 10,000 |
| 4. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகங்களும் | 3 | 3,000 |
| 5. **வியாபார நிலையங்கள்** | 50 | 5,000 |
| 6. உணவகம் | 3 | 33,000 |
| 7. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 8. தொழிற்பேட்டைகள் | 10 | 10,000 |
| | | 80,000 |

சுமார் நாளாந்தம்80,000 கலன் எனக்கொள்ளலாம். நகரவாழ் மக்களின் எண்ணிக்கை 10,000 ஆக அதிகரித்தால், அவர்களின் குடிநீர்த் தேவை நாளாந்தம் 80,000 கலன் ஆகும். ஆகவே, நாளாந்தம் தேவைப்படும் நீரின் அளவு 100,000 கலன் ஆகும். இவ்விடத்தில் மேற்பரப்பு நீருக்கு 'சாத்தியம் இல்லை. ஆகவே, ஆய்வுகள் நடாத்தி நில்க்கீழ் நீரையே பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 3.18 அறுவாக்காடு

இப்பிரதேசத்தின் பட்டினம் பொம்பரிப்பில் அமையும். இப்பிரதேசம் வில்பத்து தேசிய வனவிலங்குப் பிரதேசத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கும். மேலும், இவ்விடத்தில் கலா ஓயா போன்ற ஆறுகள் இருப்பதால், இவ்விடத்தில் மேற்பரப்பு நீருக்கு வாய்ப்புண்டு.

## 3.19 புத்தளம்

தற்போதைய புத்தளம் நகருக்கு சீனாவின் உதவியுடன் 400 கோடி ரூபாவுக்கு ஒரு புதிய நீர் விநியோகத்திட்டம் 1992 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்நகருக்கு ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற 16 குழாய்க் கிணறுகளில் இருந்து நீர் பெறப்படுகின்றது. இத்திட்டம் தற்போதைய நகரின் குடிநீர்த்தேவையைப் பூர்த்திசெய்கின்றது. மேலும், இந்நகர் விஸ்தரிக்கும்பட்சத்தில் மேலதிகமான கிணறுகளை அமைத்து நீரைப்பெற்றுக் கொள்ளலாம்.

## 3.20 சிலாபம்

சிலாபம் நகரில், சீன அரசாங்கத்தின் உதவியுடன் 500 கோடி ரூபாவிற்கு ஒரு புதிய நீர் விநியோகத் திட்டம், 1992 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்நகருக்கு ஏழு மைல்களுக்கு அப்பால் உள்ள 11 குழாய்க் கிணறுகளில் இருந்து நீர் எடுக்கப்படுகின்றது. பொதுவாக நகர்ப்பகுதிகளில் உள்ள கிணறுகளில், அதிகமான இரும்பு உலோகம் காணப்படுகின்றது. இத்திட்டம் இப்போதைய நகரின் தேவையைப் பூர்த்திசெய்கின்றது. எனினும், நகரம் விஸ்தரிக்கப்பட்டால், மேலும் பல குழாய்க் கிணறுகளை நிர்மாணித்து நீரைப் பெற்றுக் கொள்ளலாம். ■

(முற்றும்)

# எயர்பஸ் கொள்வனவு விசாரிக்க ஆணைக்குழு

ஏயர்லங்காவின் ஏயர்பஸ் கொள்வனவு பற்றி ஆராய, தனிநபர் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரான்சிலிருந்தான இக் கொள்வனவு பற்றி ஆராய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஓ. எஸ். எம். செனவிரத்ன நியமிக்கப் பட்டுள்ளார். ஆறு வாரங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுடன்படிக்கை, செலவு கூடியதாயினும், முற்பணமாகவும், அபராதமாகவும் 10 கோடி டொலர்கள் இழக்கப்படுவதைத் தடுக்கும்முகமாக இவ்விமானக் கொள்வனவை, தொடர்ந்தும் மேற்கொள்ள சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# பேச்சுவார்த்தை தோல்விகண்டால் இலங்கையில் கடும்போர் வெடிக்கும்!

## - சிங்களத் தளபதிகள் எச்சரிக்கை

விடுதலைப் புலிகள் மற்றும் சிறீலங்கா அரசுக்கு இடையிலான அமைதிப்பேச்சுக்களுக்கு, சிங்கள இராணுவம் பகிரங்க எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இப்பேச்சுக்களில் மட்டும் தோல்வி ஏற்பட்டால், இலங்கையில் பயங்கரப்போர் வெடிக்கும் என்று, சிங்கள இராணுவத் தளபதிகள் எச்சரித்துள்ளனர். அவர்களின் பகிரங்க எதிர்ப்பைக் கண்டு பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசு தவித்துக்கொண்டிருக்கின்றது. 1983 இல் உள்நாட்டுப் போராக மாறிய இனப்பிரச்சினையில் இதுவரை முப்பதாயிரம் பேர்வரையில் மாண்டுள்ளனர். முன்னாள் அரச அதிபர்களான ஜெயவர்த்தனா, பிரேமதாசா மற்றும் விஜேதுங்கா போன்றோர் சமாதானம் பேசவே முன்வர விரும்பவில்லை.

ஆனால், கடந்த தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவி ஏற்றுக்கொண்ட சந்திரிகா மட்டுமே சமரசம்பேசத் தயாரானார்.

இலங்கையின் நிரந்தர அமைதிக்காக, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றி சமரசம் பேசத்தயார் என்றார் அவர்.

முதலில் யாழ்ப்பாணத்துக்கான உணவு, வர்த்தக, போக்குவரத்துத்தடைகளை ஓரளவு தளர்த்தினார். இப்போது, யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுள்ள படைகளை, சமாதானம் ஏற்பட்டால் மீளப்பெறவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

"விடுதலைப் புலிகளுடன் சமரசம் பேசுவதற்காக நால்வர்கொண்ட ஒரு குழுவையும் அவர் அண்மையில் அறிவித்தார்.

ஆனால், சமாதானப்பேச்சு நடாத்தத் தயார் என்று கூறிக்கொண்டு, அதேநேரத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கடும்தாக்குதலை நடாத்தி வருகின்றனர்.

ஆனால், இந்த சமாதானப் பேச்சுக்களுக்கு சிறீலங்கா இராணுவ உயர் தளபதிகள் பகிரங்கமாகவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

**"இப்பேச்சுக்கள் மட்டும் தோல்விகண்டால், இலங்கையில் மீண்டும் பயங்கரப்போர் வெடிக்கப்போகின்றது" என்று அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.**

விடுதலைப் புலிகளுடன் சமரசம் பேசுவதில் அர்த்தமேயில்லை. அவர்களை நம்பமுடியாது. போரில் வெல்லவேண்டும் அதுதான் எங்களுக்குப் பெருமை. இதுபோன்ற பேச்சுக்களில் அரசு ஈடுபடுவது, சிறுபிள்ளைத்தனமாக உள்ளது" என்று உயர்தளபதிகள் கூறுகின்றனர்.

**"பேச்சுக்களில் தோல்வி ஏற்படப்போவது நிச்சயம். எனவே போருக்கு இப்போதே தயாராகிக் கொண்டிருக்கின்றோம். இதற்கரகத்தான் வடகிழக்குப் பகுதிகளில் துருப்புக்கள் குவிக்கப்படுகின்றன; போர்த் தளபாடங்கள் இறக்கப்படுகின்றன" என்று கூறிய அவர் , "பிரதமர் சந்திரிகா மிகப்பெரிய தவறைச் செய்துகொண்டிருக்கின்றார்" என்றும் சாடினார்.**

அவர்கள் கூறியபடி, வடகிழக்குப் பகுதிகளில், சிறீலங்கா இராணுவம் பீரங்கிகளையும் கவச வாகனங்களையும் ஏராளமாகக் குவிக்கத் தொடங்கியுள்ளது.

அவர்களுக்கு ஈடுகொடுக்க, தமிழீழ விடுதலைப் புலிகளும் கடும் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தாயக மண்மீட்புப் பணியைத் தொடர விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏராளமான இளைஞர்களும் பெண்களும் சேரத்தொடங்கியுள்ளனர்.

"எங்கள் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் என்ன உத்தரவு போடுகிறாரோ அதைத்தான் நாங்கள் கடைப்பிடிப்போம் என்று அவர்கள் தெரிவித்தனர்" என, **'மலேசிய நண்பன்'** என்ற அக்டோபர் 1 ஆம் நாள் செய்தித்தாள் செய்தி தெரிவித்துள்ளது. ■

# பொது நூலகங்களுக்கு புதிய நூல்கள் கொள்வனவு

வலிமேற்கு பிரதேச சபையினரால் நடத்தப்படும் யொது நூலகங்களில், படிப்போர் நன்மைகருதி, பல பெறுமதிவாய்ந்த நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இதுவரை காலமும் ஏற்பட்டிருந்த யொது நூலக தளபாடப் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்களின் பொது நூலகங்களுக்கான நூல்கள், தளபாடங்கள் அதிகரிக்கப்பட்டதனை அடுத்து, மேற்படி நூலகங்களில் படிப்போர் தொகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்தோடு, மேற்படி பகுதிகளில் இடம்பெயர்ந்தோர் முகாம்களும் கூடிய அளவில் காணப்படுவதால், அங்கு வாழும் மக்களுக்கும் கல்வி வாய்ப்பும், படிக்கும் தன்மையும் அதிகரிக்க வாய்ப்புக் கிட்டியுள்ளது. ■


# சிறு கதை

கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சந்தியில் சனம் கூடத் தொடங்கி விட்டது. மாலை 5 மணி தாண்டி விட்டால் இது வழமையான நிகழ்ச்சி தான்.

பலவகைப்பட்ட சனங்கள். சந்தியின் முகப்பில் இருக்கும் அந்தக் கடையின் முன் விறாந்தையில் வைக்கப் பட்டிருக்கும் பெரிய மேசையைச் சுற்றி ஒரு கும்பல் நிற்கும்.

புஸ்பா தங்கத்துரை, பாலகுமாரன், ரமணிச்சந்திரன், சிவசங்கரி, . சுஜாதா, ராஜேஸ்குமார்.... இன்னும் பலர் மேசையில் குவிந்து கிடந்த புத்தகங்களின் முன் அட்டைகளில் இருந்து, சற்றி நிற்கும் ரசிகர் கூட்டத்தைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

மேசைச் 'சுற்றிவளைப்பு' மேற்கொள்ளும் அணியில் பாடசாலை -பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் பிரதான அங்கம் வகிப்பார்கள்.



இத்தனைக்கும் அந்தக்கடை புத்தகக்கடை அல்ல. பலசரக்குக் கடை.

அந்நிய மோகம் எம் மத்தியில் ஆழமாய் வேரூன்றி விட்டதால் இந்திய எழுத்தாளர்களின் -தரமான - தரமற்ற எல்லாப் படைப்புகளுமே எம் இளைய பரம்பரையினரை ஈர்த்துக் கொண்டிருப்பதை நன்றாகவே அறிந்திருந்ததால், தமது வியாபாரம் பெருகுவதற்காகக் கடை முதலாளிகள் கையாளும் 'வியாபாரத் தந்திரம்' இது.

அந்தக் கடைக்கு முன்னால் எதிர் முனையில் ஒரு வீடியோக் கடை.

அங்கேயும் இந்திய ஆக்கிரமிப்புத் தான்.

தமிழீழத்திலிருந்து
சாவித்திரி
அத்துவிதானந்தன்

வெவ்வேறு கோணங்களில் தென்னிந்திய திரைப்படங்களின், நடிக, நடிகையரின் படங்கள் ஏராளமாய் அந்தக் கடைக்கு முன்னால் அணிவகுப்பில் நிற்கின்றன.

அந்த விளம்பரப்படங்களை வாய்பிளந்து ரசிப்பதற்காகவே அந்தச் சந்தியில் கூடும் ஒரு கும்பலும் உண்டு.

" ராஜ்... ரமணிச்சந்திரன்ரை புத்தகம் இருந்தால் எனக்கு எடுத்துத் தாடி...." மேசையில் புத்தகங்களைக் கிளறிக் கொண்டிருந்த ஒரு பல்கலைக்கழக மாணவி அருகில் நின்றவளிடம் இப்படிக் கூறுகிறாள்.

" உனக்கு எப்ப பார்த்தாலும் ரமணிச்சந்திரனின்ரை கதை தான் எல்லாக்கதையும் ஒரே மாதிரித்தான் இருக்கும்" இப்படி அலுத்துக் கொண்டே கூறிய ராஜி என்ற பெண்ணும் ஆவலோடு தேடிக் கொண்டிருந்தது ரமணிச்சந்திரனைத்தான்!

நாகரிமாக உடையணிந்து 'அவன்' கடையை நோக்கி வருகிறான். தோளில் துணிப்பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்.

" ரெண்டு பிறிஸ்டல்" என்று கூறிப் பணத்தைக் கடைக்காரன் இருந்த மேசையில் வைக்கிறான்.

சுற்றிவரக் கண்களை ஓட விட்டுச் சூழலை அவதானித்தபடியே சிகரெட்டைப் பற்ற வைக்கிறான்.

கடையில் வருவோரும், போவோருமாக வியாபாரம் மும்முரமாய் நடந்து கொண்டிருக்கிறது.

யாரையோ அல்லது எதையோ எதிர்பார்த்து நிற்பது போன்ற பாவனையில் 'அவன்' கடைவாசலிலேயே நின்று கொண்டிருக்க,

" தம்பி....சீனி இருக்கோ...?" என்று கேட்டபடி கந்தையர் கடைக்குள் நுழைகிறார்.

"இருக்குதையா.... ஆனா... விலைதான் கொஞ்சம் கூட..."

"ஏன் சீனி தட்டுப்பாடோ?"

"ஓம் ஐயா மூடைக்கு ஆயிரம் ரூபாய் கூடக் கேக்கிறாங்கள்.... பின்னை எடுக்காம வந்திட்டம்..."

' அது சரி தம்பி... இப்ப உங்களிட்டை இருக்கிறது முந்தி எடுத்த சீனி மூட்டை தானே...? அதுக்கேன் விலை கூட்டிறியள்?"

கடைக்காரர் முகத்தில் அசடு வழிகிறது.

கந்தையரின் கேள்விக்கு என்ன பதில் சொல்லலாம் என அவர் குழம்பிக் கொண்டிருந்த போது,

'அவன்' புத்தக மேசைப் பக்கம் நகர்கிறான்.

" என்ன கந்தையாண்ணை... கன நாளாய் உங்களை அங்காலை வீட்டுப்பக்கம் காணேல்லை?" என்ற குரல் கேட்டுக் கந்தையர் திரும்புகிறார்.

" அட... நித்தியே....? ரெண்டு மூன்று நாள் உன்னட்டை வந்தனான். மனிசி சொன்னதே... உனக்கு இப்ப இயக்கத்திலே ஏதோ வேலை கிடைச்சிருக்காம் எண்டு சொல்லிச்சுது....?"

" ஓமண்ணை... வேலை பாக்காமை இந்த நாளிலை என்னெண்டு சீவியம் போறது...? பொடியளிட்டைத் தான் கேட்டன்... அவை ஒரு வேலை தந்தினம்..."

" எங்கை வேலை....? என்ன வேலை செய்யிறனி?"

'அவன்' காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறான்.

மேசையில் கிடந்த புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த அவனது கவனம் முழுவதும் கந்தையர் நித்தியின் உரையாடலிலேயே பதிந்திருக்கிறது.

# இப்படித்தான்...

" அதண்ணை... இயக்கத்தின்ரை அரசியல் துறை main office இலை தான் வேலை. பொறுப்பாளரைச் சந்திக்க வாறவையின்ரை பேர்கள் பதிவு செய்து வைக்கிறதும்... வேறை வேலைகளும் செய்யிறனான்..." கூறிக்கொண்டே அன்றைய பத்திரிகை ஒன்றை நித்தி எடுத்துப் புரட்டுகிறான்.

" தம்பி அரைக்கிலோ சீனி கட்டு..." சொல்லிக் கொண்டிருக்கையில் கந்தையருக்கு, நித்தியின் சின்னம்மாவை முன்தினம் கண்ட ஞாபகம் வருகிறது.

"சொன்னாப் போலை...நித்தி... நேற்று உன்ரை கமலாச்சின்னம்மாவைக் கண்டனான்..."

அப்ப சாவகச்சேரிக்குப் போயிருக்கிறீங்கள்..." பத்திரிகையை விட்டு கண்களை எடுக்காமலேயே நித்தி கேட்கிறான்.

ஒரு அலுவலாய்ப் போனனான்... சாவகச்சேரிச் சந்தைக்குள்ளை தான் உன்ரை சின்னம்மாவைக் கண்டனான்... உன்னைப்பற்றியும் விசாரிச்சா..."

நாகரிகமாக உடையணிந்து 'அவன்' கடையைநோக்கி வருகிறான். தோளில் துணிப்பை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்.

"சாவகச்சேரி மாக்கெற்றடியிலை கிட்டு மாமான்ரை தூபி பார்த்தனீங்களே...?"

" பார்த்தனான் வடிவாயிருக்கு... வேலை எல்லாம் முடிஞ்சு இப்ப பெயின்ற் அடிக்கினம்..."

" திறப்பு விழா நடக்கப் போகுதல்லே... அதுதான் பெயின்ற் அடிக்கினம் போலை,

'அவன்' உசாராகிறான்.

"திறப்பு விழா நடக்கப் போகுதே....? எப்ப தம்பி...? பேப்பரிலை ஒண்டும் போடேலை...." ஆர்வத்துடன் கந்தையர் கேட்கிறார்.

" நாளண்டைக்குப் பின்னேரம் அஞ்சு மணிக்குத் திறப்பு விழா"

" உனக்கு வடிவாய்த் தெரியுமே...? நான் கட்டாயம் அதுக்குப் போக வேணும்..."

அரசியல் துறை Office இலை தானே அண்ணை. முதலில் எங்களுக்கு நியூஸ் எல்லாம் தெரிஞ்சுடும்... பேப்பரிலை போடுறதெண்டால் நாளண்டைப் பேப்பரிலை தான் வரும்..."

" உன்னட்ட இப்ப கேட்டது நல்லதாய்ப் போச்சு... கிட்டற்றை நினைவாலயத் திறப்பு விழாவுக்குப் போகாமை விடுறதே...? -கந்தையர் சில விநாடி மௌனமாய் நின்று கிட்டுவை நினைத்துப் பார்க்கிறார்.

"இயக்கப் பொறுப்பாளர்மாரும் கூட்டத்திலை பேசுவினம் தானே?" நித்தியிடம் கேட்கிறார்.

இப்பொழுது 'அவன்' இவர்களுக்கு மிக அருகில்... "ரெண்டு முக்கிய பொறுப்பாளர்மாரும், நாலைஞ்சு(Area) ஏரியாப் பொறுப்பாளர்மாரும் பேசுவினம் எண்டமாதிரி இண்டைக்கு அங்கை கதைச்சவை"

" இந்தாருங்கோ சீனி..." கடைக்காரர் பொட்டலத்தைக் கந்தையரிடம் கொடுக்கிறார்.

" அப்ப... நித்தி... நாளண்டைக்குப் போகேக்கை கமலாவைக் கண்டா, நீ விசாரிச்சனி எண்டு சொல்லிவிடுறன்... நான் வரட்டே தம்பி...?"

" ஓமண்ணை வாருங்கோ..."

நாளை மறுதினம் திறப்புவிழாவுக்குப் போகும் கற்பனைகளுடனும், கையில் சீனி பொட்டலத்துடனும் கந்தையர் வீடு திரும்புகிறார்.

சிறீலங்கா இராணுவத்துக்கு உளவு சொல்ல 'விடயம்' தேடிவிட்ட வெற்றிக்களிப்போடு 'அவன்' கடையை விட்டு வெளியேறுகிறான்.

இரண்டு நாட்கள் கடந்தன.

தமிழ்த் தினசரிகள் அன்று காலையில் தாங்கி வந்த பிரதான தலைப்புச் செய்தி.

சிறீலங்கா விமானக் குண்டுவீச்சில் 9 அப்பாவி பொதுமக்கள் பலி! பலர் படுகாயம்! சாவகச்சேரியில் கோரச் சம்பவம். ■

## பொலிஸ் உயரதிகாரிகள் பலர் தப்பியோட்டம்

பல வன்செயல்களுக்குக் காரணமான பொலிஸ் உயரதிகாரிகள் பலர், நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர். தென்னிலங்கையில் இளைஞர்களைக் கொன்றமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள், இவர்களின் மேல் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. ■

# கிழக்கில் 27,000 தமிழர்கள் ஆயுதப்படையால் படுகொலை

## அம்பாறையில் உயர்ந்தளவு இழப்பு

இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததன் பின்னர், கிழக்கு மாகாணத்தில் 27, 000 தமிழர்கள் சிறீலங்கா ஆயுதப்படையினரால் படுகொலைசெய்யப்பட்டோ, அன்றி காணாமற்போயோ உள்ளனர். இவர்களில் அநேகர் அம்பாறை மாவட்டத்தைச் சார்ந்தவர்களாவர். இவ்வாறு கடந்த ஆறு மாதங்களாகக் கிழக்கு மாகாணத்தில் ஆய்வைமேற்கொண்ட சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் ஒன்றின் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இவ்வாய்வின் பிரகாரம், தென் தமிழீழத்தில் அம்பாறை மாவட்டமே கூடுதலான இழப்பைச்சந்தித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக திருகோணமலை மாவட்டமும், மட்டக்களப்பு மாவட்டமும் அமைகின்றன. அம்பாறை மாவட்டத்தில் 16, 800 தமிழ் மக்கள் இறந்தும், காணாமல் போயுமுள்ளனர். இதிலும் பாண்டிருப்புக் கிராமமே கிராமவாரியாகப் பார்க்கும்போது, அதிகமானவர்களை இழந்துள்ளது. இக்கிராமத்தில் ஒரேநாளில் நாற்பது இளைஞர்கள், சிறீலங்காப்படைகளால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் சடலங்களைப் பொறுப்பேற்கச் செல்லுமாறு உறவினர்களுக்கு கட்டளையிட்ட இராணுவம், சடலங்களைப் பொறுபேற்கச் சென்றவர்கள் எண்பதுபேரை இராணுவமுகாமிலேயே ஒரேநாளில் சுட்டுப்பொசுக்கியது.

இந்தக் கறைபடிந்த வரலாற்றுப் புள்ளிவிபரங்களை கடந்த ஆறு, மாதகாலமாகத் தென்தமிழீழத்தில் ஆய்வை மேற்கொண்டிருந்த, சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் ஒன்று திரட்டியுள்ளது. ■

# தென்னைகளைத் தறித்து கொழும்பிற்கு அனுப்பும் இராணுவம்

வாகரையிலுள்ள மாங்கேணி, இம்பந்தனவெளி, கதிரவெளி, வாகரை, கிருமிச்சை ஆகிய முகாம்களைச் சேர்ந்த சிறீலங்கா இராணுவத்தினர், அப்பகுதிகளிலுள்ள பல பயன்தரு தென்னை மரங்கனளை வெட்டி, தங்களது காவலரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

அப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு தென்னந்தோட்ட உரிமையாளரும் , ஐம்பது தென்னைகள் வீதம் தரவேண்டும் என இவர்கள் பலவந்தப்படுத்தி வருகின்றனர்.

இம்மரங்கள் அனைத்தும் பட்டை உடைக்கப்பட்டு, வாகனங்கள் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அப்பகுதி மக்கள் இராணுவத்தினரின் இக்கெடுபிடிகளுக்கு அஞ்சி, மரங்களை வெட்டிக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ■

# வெளிநாட்டில் வாழும் தமிழீழ...

தமிழீழத் தேசிய விடுதலைப் போரின் வெற்றியினால் தமிழீழம் விடுதலைபெறும். விடுதலை பெற்ற தமிழீழத்தில் வாழும் மக்கள் தாம் தமிழீழ மக்கள் என்ற உணர்வுடன் வாழ்வார்கள். இந்தநிலை ஏற்படும்போதுதான் தமிழினத்திற்கே முழுமையான நிரந்தரவிடிவு ஏற்படும். இதற்கு இன்று அவசியமானது 'தமிழீழத் தேசியம்' பாதுகாக்கப்படுவதோடு எதனையும் நாம் தேசிய நோக்குடன் செய்யமுன்வருவதுமாகும். ஒவ்வொரு ஊரும் தனித்தனியாக முன்னேறும்போது, நாடு முன்னேறும் என்ற கருத்து 30 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால், இன்றுள்ள நிலைமைகளைக் கவனத்திற்கொண்டே நாம் காரியம் ஆற்றவேண்டும். இதேபோன்று இங்குள்ள மாணவ அமைப்புக்களும் தாம் இப்பொழுது படிக்கும் பாடசாலைகளில் சில கலை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறார்கள். இது வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால், இம்மாணவ அமைப்புக்கள், அனைத்தும் ஒன்றுபட்டு ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்ளவேண்டும். அந்த பொது வேலைத் திட்டத்தில் முக்கியமாக தமிழரின் தனிப்பெரும் சொத்தான கல்வியை பாழடிக்கும் நோக்குடன் திட்டமிட்டு பல்வித நாச வேலைகளைச் செய்துவரும் சிறீலங்கா அரசுக்கு எதிரான அழுத்தத்தை பிரயோகிக்கும்படி இவ்மாணவ அமைப்புக்கள் தாம் வாழும் நாடுகளில் உள்ள அரசையோ, கல்வியமைச்சையோ கேட்கலாம். தாம் வாழும் நாடுகளின் விஞ்ஞான வளர்ச்சி எவ்விதம் தமிழீழ மண்ணுக்கு உரிய முறையில் பயன்படுத்தலாம் என்றதனை ஆராய்ந்து கண்டறிந்து, அதனைத் தமிழீழக் கல்வித்துறைக்கு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு அனுப்பி உதவலாம். இவைகள் பற்றிச் சிந்தியாதுவிட்டு மாணவர் நிகழ்ச்சிகளில் சினிமாப்பாட்டுக்கு ஏற்ப நாம் ஆடிப்பாடி கூத்தாடுவதிலோ, ஆண்டுக்கு ஒரு விளையாட்டுப் போட்டியையும், பேச்சுப்போட்டிகளையும், பட்டறிவுகளையும் நடாத்திக்கொண்டு இருந்தால்போதும் என்று இராது, எமது மண்ணில் நடைபெறும் தேசிய விடுதலைப் போருக்கு பலம்சேர்க்கும் காரியங்களில், குறிப்பாகத் தமிழீழ மண்ணில் உள்ள மாணவ சமுதாயத்தின் கல்வித் தேவைக்கு எவ்வாறு எல்லாம் உதவலாமோ, அவ்வாறு எல்லாம் உதவும் மாபெரும் பொறுப்பு வெளிநாடுவாழ் தமிழீழ மாணவ சமுதாயத்திடமும் உண்டு என்பதையும் நாம் மறக்கக்கூடாது. ■

> "தமிழீழ மாணவ அமைப்புக்கள் தாம் வாழும் நாடுகளின் விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியை, எவ்விதம் தமிழீழ மண்ணுக்குரிய முறையில் பயன்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து கண்டறிந்து, அதனை தமிழீழ கல்வித்துறைக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கும் அனுப்பி உதவலாம். இதுவும் தமிழீழத் தேசிய விடுதலைப் போருக்கு பலம் சேர்க்கும்."

நன்றி: உலகத்தமிழர்

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தமிழீழ மண்மீட்புக்கான, முனைப்புக்களில் ஈடுபட்டிருந்த வேளையில், 18. 10. 1991 இல் நடைபெற்ற கார் விபத்தொன்றில் மரணத்தைத் தழுவிக் கொண்ட, தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் யேர்மன் கிளைப் பொறுப்பாளர் சுரேந்தி (சுரேந்திரகுமார்) அவர்கள், உடலால் எம்மை விட்டுப் பிரிந்து 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

1983 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மன் கிளையோடு தன்னை இணைத்துக் கொண்ட இவர், தனது இறுதி மூச்சு வரை ஆற்றிய சேவையும், கடின உழைப்பும், யேர்மன் கிளையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளன. நிதி நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் தனது உடைமைகள் அனைத்தையும் விற்று வந்த பணத்தை நாட்டு விடுதலைக்காக அர்ப்பணித்த போது, "என் உடைமைகள் வேறு, புலிகள் உடைமைகள் வேறு அல்ல" எனக் கூறிய இத் தேசப் பற்றாளனின் இழப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடு செய்ய முடியாததே.

சுரேந்தி அவர்களுக்கும், இவருக்குப் பக்கபலமாக தோள் கொடுத்து நின்று தமிழீழ விடுதலையை முன்னெடுத்து அன்றைய கார் விபத்தில் மரணத்தைத் தழுவிக் கொண்ட, தேசப் பற்றாளர்களான குஞ்சன் (கிருஸ்ணமூர்த்தி), சௌந்து (சௌந்தரராஜன்), விஜி(திருமதி. விஜயகுமாரி சௌந்தரராஜன்), சபேலா(செல்வி. சபேலா சௌந்தரராஜன்) ஆகியோருக்கும் எமது இதய அஞ்சலிகள். ■

# வவுனியாவில் விமானக் குண்டுவீச்சு 30 நிமிட நேரம் கடும் தாக்குதல்

வவுனியா, பகுதியில் சிறீலங்கா விமானப்படையின் விமானங்கள், 28. 09. 1994 பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

வவுனியா. ஈச்சங்குளம் . கல்மடு பகுதிகளில் உலங்குவானூர்தி ஒன்று தாழப்பறந்து வேவுபார்க்க. குண்டுவீச்சவிமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின. சுமார் 30 நிமிடங்கள் வரை இத்தாக்குதல் நீடித்ததாகவும். இதன் போது விடுதலைப் புலிகள் கடும் பீரங்கித் தாக்குதலை நடாத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. ■

## விடுதலைப் புலிகள்...

யாழ். குடாநாட்டுக்கான நுழைவாயில்களான மண்டைதீவிலும் ஆனையிறவிலும் இராணுவமுகாம்கள் நிறுவப்பட்டுள்ள நிலையில், கேரதீவு -சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதன்மூலம் மக்கள் சுதந்திரமான போக்குவரத்தை மேற்கொள்ளலாம் என, விடுதலைப் புலிகள் வலியுறுத்தியதாக அறியப்படுகின்றது. இப்பாதை திறக்கப்படும்பொழுது, பூநகரி இராணுவமுகாம் அகற்றப்படவேண்டியதன் பொதுநோக்குக் குறித்தும் தூதுக்குழுவுக்கு விளக்கப்பட்டுள்ளது.

ஆனால், கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படுமிடத்து, பூநகரியில் பயணிகளைச் சோதனையிடுவதற்கான காவல் நிலையமொன்றைப் போடப் போவதில்லை; ஆனால், அந்த முகாமில் இருந்து நடமாட்டங்களை அவதானிக்கவேண்டிய தேவை இருப்பதாக, சிறீலங்கா இராணுவ வட்டாரங்கள் கருதுவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இப்பேச்சுவார்த்தைகளின்போது, ஆசியாவின் தலைசிறந்த நூலகமாக விளங்கிய யாழ். நூல்நிலையத்தை எரித்து நாசமாக்கியவர்களைக் கண்டறிந்து, நீதிவழங்கக்கூடியவகையில் விசாரணைக்குழு ஒன்றை அமைக்கவேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டதாகவும் பின்னர், திருமதி சந்திரிகா ஒரு ஆணைக்குழுவை அமைப்பதற்கு முன்வந்துள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## சமாதான...

நிலைப்பாட்டுக்கு, இராணுவத்தினர் தங்கள் பூரண ஒத்துழைப்பைத்தரவேண்டும்" எனவும் அவ்வுயர் அதிகாரி ஏ. எவ். பிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, அமைதிப்பேச்சுக்கள் தோல்வியடைந்தால் விடுதலைப் புலிகளுடன் போர்செய்ய காலாட்படையினர் தீவிர பயிற்சியை ஆரம்பித்துள்ளனர் எனவும், அமைதிப் பேச்சும் வேண்டாம் -குழப்பப்பேச்சும் வேண்டாம் -என்ன மதிப்பு இவற்றிற்கு என்று படையினர் மத்தியில் கருத்து நிலவுகின்றது எனவும் ஏ. எவ். பி. செய்தியாளர் கூறுகின்றார். ■


## உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனி

World Tamil Movement FRG - e. V.

Gathestr 1 A, ELBERFELD, 42107 WUPPERTAL, 955.

### உலகத்தமிழர் இயக்க கல்விப்பணி நடாத்தும் பொதுப்பரீட்சை 1994

உலகத்தமிழர் இயக்க கல்விப்பணியினர் நடாத்தும் பொதுப்பரீட்சையானது, இந்த ஆண்டு 17. 12. 1994 இல் நடைபெறவுள்ளது என்பதை யேர்மன்வாழ் தமிழ்ப்பெற்றோர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

யேர்மனியில் 76 தமிழாலயங்களை அமைத்து நிர்வகித்துவரும் எமது அமைப்பு, பரீட்சார்த்திகளின் வசதியைக் கவனத்திற்கொண்டு, வழமைபோல் யேர்மனியின் பலபாகங்களிலும் பரீட்சை நிலையங்களை அமைத்து, ஒரேநாளில் பொதுப்பரீட்சையை நடாத்திமுடிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தமிழாலயங்களில் கல்விபயிலும் மாணவர்களைத்தவிர்ந்த ஏனைய வெளிவாரிமாணவர்களும், உலகத்தமிழர் இயக்க கல்விப்பணியின் பொதுப்பரீட்சையில் தோற்றலாம் என்பதை அறியத்தருகின்றோம். வெளிமாணவர்கள் தங்கள் நகரிலுள்ள தமிழாலயம் ஊடாகவும், தமிழாலயம் இல்லாத நகரத்து வெளிவாரி மாணவர்கள் உலகத்தமிழர் இயக்க காரியாலயத்தினூடாகவும் விண்ணப்பிக்கமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

மேலதிக விபரங்களுக்கு 0209 76956 என்னும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

காரியாலய முகவரி: World Tamil Movement, Gathestr 1 A, 42107 Wuppertal.

காரியாலயம், உலகத்தமிழர் இயக்கம்.

# தீருவில் வணங்கிய தீ

தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளை, (பாசல் மாநிலம்) 15. 10. 1994 சனிக்கிழமை யன்று, சிறீலங்கா -இந்திய கூட்டுச்சதியினால் பலாலியில் பலியாகி, தீருவில் வெளியில் தீயாகிவிட்ட குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை எழுச்சி விழாவாகக் கொண்டாடியுள்ளது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு, மாவீரர் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு எழுச்சி விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், "இன்று முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு எமது மாவீரர்கள் செய்த மகத்தான தியாகங்களே காரணம். மாவீரர் நடந்த பாதையில் தமிழ் மக்கள் பலமுடையவர்களாக இருக்கின்றமையினால் தான் சிறீலங்காவின் புதிய அரசு யாழ்ப்பாணம் சென்று பேச முன் வந்துள்ளது" எனக் குறிப்பிட்டார்.

எழுச்சி நடனத்துடன், சங்கமம் இசைக் குழுவினரின் "தீயினில் எரியாத தீபங்கள்" என்ற இசை நிகழ்ச்சி, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் (சுவிஸ் கிளை) வழங்கிய, "மயக்கங்கள் தெளிந்தால்" என்ற நாடகம் என்பன கலை நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. இக் கலை நிகழ்ச்சிகள் யாவும், பார்வையாளர் மனதில் விடுதலைத் தீயை மேலும் வளர்ப்பனவாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. ■






சுவிற்சர்லாந்தில்

**ஈழநாதம்** வானொலி தமிழ்ச்சேவை

பிரதி வெள்ளிதோறும் பி.ப. 3 மணி
தொடக்கம் 4 மணி வரை FM 104.5 Mhz
அலைவரிசையில்
ஒலிபரப்பப்படுகின்றது.



**ஈழத்தமிழர் கலையரங்கம் நடாத்தும்
நான்காவது மாபெரும்**

**மாவீரர் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1994**

1. நேரடிமுறை (Over game) நான்குபேர். ஏ பிரிவு, பீ பிரிவு.
2. சர்வதேசமுறை (Set - up game) ஆறுபேர்.

போட்டி நடைபெறும் நாள்: 19. 11. 1994

**விண்ணப்பப்படிவம்**

ஈழத்தமிழர் கலையரங்கத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் இக்கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, வழமைபோல இம்முறையும் மிகச்சிறப்பாக நடாத்தப்படவுள்ளது. தங்கள் கழகமும் மேற்படி போட்டியில் கலந்துகொண்டு சிறப்பிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நேரடிப்போட்டிகள் யாவும் TVU சட்டவிதிகளுக்கமைய நடைபெறும்.
சர்வதேச ஆட்டங்கள் சர்வதேசவிதிப்படி நடாத்தப்படும்.
இப்போட்டிகளில் TVU இல் அங்கம்வகிக்கும் கழகங்கள் பங்குபற்றலாம்.
ஒரு கழகம் எத்தனை பிரிவுகளிலும் பங்குபற்றலாம். ஆனால்
ஒவ்வொரு பிரிவுக்கும் விண்ணப்பப்பணம் 150 குறோணர்.
விண்ணப்பப்பணத்தை இத்துடன் இருக்கும் (den danske Bank) கணக்கில் செலுத்தி, பணம் செலுத்திய ரசீதையும் விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும். (ஏனெனில், வங்கியில் எக்கழகம் பணம் செலுத்தியுள்ளது என்பதை நாம் உறுதிசெய்துகொள்வதற்குக் கண்டிப்பாக இந்த ரசீது அவசியம்.)

விண்ணப்ப முடிவுநாள்: 03. 11. 1994

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:
Eellath Tamilar Kalaiyarangam,
Post box: 133, 7400, Herning.
**தொலைபேசி: 97 21 54 25**

டென்மார்க்கில் நடைபெறும் அதிசிறந்த கரப்பந்தாட்டப் போட்டிகளில், மாவீரர் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்டப் போட்டியும் ஒன்று.

குறிப்பு: தங்கள் கழகங்களிலிருந்தும் மாவீரர்களின் நினைவாகப் பரிசில்களை அன்பளிப்புச் செய்யவிரும்பின், விண்ணப்ப முடிவுநாளுக்குள் தொடர்புகொள்ளவும்.



மாவீரர்
நினைவுப்போட்டி 1994

நோர்வே முழுவதற்குமான
கட்டுரைப்போட்டி

நோர்வே வாழ் தமிழ் மக்கள் மத்தியில், மாவீரர் நாளையொட்டி கட்டுரைப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளோம்.
வயது எல்லை இன்றி எவரும் பங்குபற்றலாம்.

**தலைப்புக்கள்**

1. தமிழன் இல்லாத நாடில்லை, தமிழனுக்கென்றோர் நாடில்லை.
2. பூநகரி ஒரு வரலாற்றுச் சமர்.
3. மரணத்தை வென்ற மாவீரர்.
4. இன்னொருவன் மண்மீது இன்னும் எத்தனை நாள்?
5. சீதனமெனும் சிறுமை ஒழிப்போம்.

**கட்டுரைகள் எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதிக்குமுன் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும்.**

உங்கள் தொடர்புகளுக்கு:

T. C. C.,
Post Boks 4366,
Nygaardstangen,
5028, Bergen. Fax: 55 31 70 00

# மன்னார் தீவில் நடைபெற்ற ஆவணி அமளி

சிலாவத்துறையில் ஆடி 12ஆம் நாளன்று, உலங்குவானூர்தி மூலம் தரை இறக்கப்பட்ட இராணுவத்தினர், எம்மவரது முகாம் ஒன்றினைத் தாக்கிய சம்பவத்திற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக, மன்னார்தீவு இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் எம்மவர்களால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச் சாவடைந்த மண்ணின் மைந்தர்கள்.







லெப் ராஜா
[illegible]
[illegible]
பி. தி:------ 1976
வீ. சா: 11. 08. 1994.



கப்டன் சிறிக்காந்த்
[illegible]
[illegible]
பி. தி: 09 05. 1978
வீ. சா: 11. 08. 1994



மன்னார் தீவு பொறுப்பாளர்
**மேஜர் நாவண்ணன்/ஜஸ்மின்**
[illegible]
புகையிரத நிலையம் மன்னார்.
பி. தி: 23. 02. 1966
வீ. சா: 11. 08. 1994



கப்டன் குமரன்
பரமேஸ்வரன் பிரதீபன்
நவாலி வடக்கு, மானிப்பாய்.
பி. தி: 26. 01. 1974
வீ. சா: 11. 08. 1994



லெப் அறிவனார்
[illegible]
[illegible]
பி. தி: 14 01. 1974
வீ. சா: 11. 08. 1994

அதிரடி வீரராய் அற்புதம் படைக்க எழுந்தீர்கள்
எதிரிகள் பாடிய பாசறைக்குள்ளே புகுந்தீர்கள்
நினைத்ததை முடிக்கும் புலிப்படைவீரம் படைத்தீர்கள்
நெஞ்சினில் என்றும் நிலைத்திட இங்கே வாழ்வீர்கள்

தாயகம் விரைவினில் உதிக்கும் - இந்தக்
காவிய முகங்களோ என்றும் சிரிக்கும்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வெளியீடு: அரசியல்துறை

**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers